Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உங்கள் வனப்புக்கு மெருகூட்டிடும் வகையிலான மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும், அழகிய சங்குப் பற்களை பொருத்தவும் மிதப்புப் பற்களுக்கு சிறந்த முறையில் கிளிப் போடவும் நாடுங்கள்

எரிக் கணேஸ்

மூக்குக் கண்ணாடி அகமும் பல்கட்டுமிடமும்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 2222486

கிளை:- கொக்குவில், சுன்னாகம்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 21 (25.01.2003) சனிக்கிழமை இதழ் : 116

# அடுத்த பேச்சுவார்த்தை பேர்லினில் நோர்வே தூதரகத்தில் நடைபெறும்

## நோர்வே வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஐந்தாவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தாய்லாந்திலிருந்து ஜேர்மனிக்கு மாற்றப்பட்டிருப்பதாக நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. நோர்வே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹாஸ்ரன் கிளெஸ்விக் (Karsten Klevsvik) இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை நேற்று மாலை விடுத்தார்.**

அரச தரப்பு பிரதிநிதிகள் குழுவுக்கும் விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் குழுவுக்கும் இடையிலான ஐந்தாம் சுற்றுப் பேச்சுக்கள் ஜேர்மனியின் தலைநகர் பேர்லினுக்கு மாற்றப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் இந்தப் பேச்சுக்கள் நடக்கும். முன்னதாக, இந்தப் பேச்சுக்கள் தாய்லாந்தில் நகொன்பத்தம் நகரில் நடைபெறுவதாக இருந்தது. புலிகளின் தரப்புக் குழுவுக்கு தலைமை தாங்கும் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நலக் குறைவு காரணமாகவே, ஜேர்மனியின் தலைநகர் பேர்லினுக்கு பேச்சுக்கள் மாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பேர்லினிலுள்ள நோர்வேத் தூதரக வளாகத்தில் இந்தப் பேச்சுக்கள் நடைபெறுமென, நோர்வே வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹாஸ்ரன் கிளெஸ்பிக் மேலும் தெரிவித்தார்.

## சமாதானப் பேச்சு நடக்கவுள்ள நோர்டிக் எம்பசி கொம்ளெக்ஸ்



ஐந்தாவது சுற்று சமாதானப் பேச்சு பேர்லினில்,நோர்வே தூதரகம் அமைந்துள்ள 'நோர்டிக் எம்பசி கொம்ளெக்ஸ்' வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த 'நோர்டிக் எம்பசி கொம்ளெக்ஸ்' இல்- டென்மார்க், சுவீடன், பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே ஆகிய ஐந்து நாடுகளின் தூதரகங்கள் அமைந்திருக்கின்றன.

அந்தந்த நாட்டு கட்டடக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட இக் கட்டடத்தொகுதியை, 1999 இல் 5 நாடுகளின் தலைவர்களும் இணைந்து திறந்துவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விண்ணாணம் விநாசியர்



அழுகின பழத்தால அத்தனையும் பாழாகிற கதையா இருக்கக் கூடாது பாருங்கோ...

## பல்கலைக்கழக விடுதியில் 'ராகிங்'; புதுமுக மாணவன் வைத்தியசாலையில்!

### ஈடுபட்ட சிரேஷ்ட மாணவன் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் தங்குவிடுதியான பாலசிங்கம் ஆண்கள் விடுதியில், நேற்று முன்தினம் நள்ளிரவு சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் நடாத்தப்பட்ட 'ராகிங்' - புதுமுக மாணவன் ஒருவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் அளவிற்குத் தீவிரமானதைத் தொடர்ந்து - சம்பந்தப்பட்ட சிரேஷ்ட மாணவன் ஒருவர் பல்கலைக்கழகத்திலிருந்து நிர்வாகத்தினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது - பாலசிங்கம் ஆண்கள் விடுதியில் தினமும் இரவு வேளையில் அங்கு தங்கியுள்ள புதுமுக மாணவர்கள் மீது ஷராகிங்' நடாத்தப்பட்டு வந்தது.

இதன் தொடராக நேற்று முன்தினம் இரவு, ஜெயப்பிரகாஷ் (வயது-22) என்ற புதுமுக மாணவன் - கடுமையான முறையில் சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் உடல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டு ராகிங் செய்யப்பட்டார்.

இதன்போது - வாயால் நுரை வெளிவந்த நிலையில் மூர்ச்சையான இம்மாணவன், அதிகாலை 1.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு பத்தாம் வாட்டில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உருக்குலைந்த நிலையில் பற்றைக்குள் பெண் சடலம்!

(ஊர்காவற்துறை நிருபர்)

ஊர்காவற்துறை கரம்பனில் ஆள்நடமாட்டம் குறைந்த பகுதியில் பற்றை ஒன்றினுள் உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கரம்பன் பத்திரம்பிட்டி வீதியில் அமைந்துள்ள பற்றைக்காணி ஒன்றில் அழுகிய நிலையில் காணப்பட்ட சடலம் தொடர்பாக, அந்தப்பகுதி மக்கள் ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் புகார் தெரிவித்திருந்தனர். பற்றையினுள் காணப்பட்ட சடலத்தின் கால் மற்றும் கை பகுதிகள் மேலும் சில அங்கங்கள் இல்லாத

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் விசாரணை இரண்டாம் கட்டம் நேற்று ஆரம்பம்



உறவைத்தொலைத்த துயரம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் சம்பந்தமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக் குழுவினர் மேற்கொண்டு வரும் இரண்டாம் கட்ட விசாரணைகள், நேற்று யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றன.

விசாரணைகளை மேற்கொள்வதற்கென காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணைக் குழுவைச் சேர்ந்த முன்னாள் அரசாங்க அதிபர் கலாநிதி தேவநேசன் நேசையா, முன்னாள் திருகோணமலை அரசாங்க அதிபர் கமிலஸ் பெர்ணான்டோ, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜெசிமா இஸ்மாயில், விசாரணைக் குழுவின் செயலாளர் இக்பால் மற்றும் விசாரணை அதிகாரிகள் இருவர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர் .

நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த இரண்டாம் கட்ட விசாரணைகள், இன்றும் நாளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை- இவ் விசாரணைக் குழுவில் காணாமற்போனோர் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரை நியமிக்கக் கோரியும் இவருக்கு நாளாந்தம் இருநூறு ரூபா வேதனம் வழங்க வேண்டும் எனவும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறை தமிழ் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், பெப்ரவரி 03 ஆம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக தமது சட்டத்தரணிகளுக்கு அறிவித்திருக்கின்றனர்.

தமது விடுதலை குறித்து அரசாங்கமோ அரசியல் கட்சிகளோ எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையிலேயே, தாம் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவிருப்பதாக களுத்துறைச் சிறைக்கைதிகள் அறிவித்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

J/F 021 - 2223916, 0777 - 517019

01-505632, 074-612656, 01-390128

(சி-518)

# ஈராக்கிடம் பலஸ்டிக் ஏவுகணைகள் அமெரிக்க அமைச்சர் அறிவிப்பு



சதாமின் ஆதரவுக்குக் குறைவில்லை

ஈராக் இரகசியமான ஆயுத உற்பத்தித் திட்டத்தினை தன்னகத்தே வைத்திருப்பதாக அமெரிக்கா உறுதிபட நம்புகின்றது. ஆயுதப் பரிசோதகர்களின் உத்தியோகபூர்வ அறிக்கையை பாதுகாப்புச் சபைக்குக் கையளிக்க முன்னர், அமெரிக்க உள்நாட்டுத் துணைச் செயலர் ஜோன் போல்டன் இவ்வாறு அறிவித்துள்ளார்.

ஜப்பானியத் தலைநகர் ரோக்கியோவில் செய்தியாளர் மத்தியில் உரையாற்றும்போது, ஈராக் நீண்டதூர பலஸ்டிக் ஏவுகணைகளை 1991 ஆம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் முன்னரே உற்பத்தி செய்து வைத்திருப்பதாக போல்டன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கிய உயர் இராணுவ அதிகாரிகள் இரசாயன ஆயுதங்களின் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான பாதுகாப்பு உடைகளையும் மருந்துகளையும் தம்வசம் வைத்துள்ளனர் என்றும், இந்த நடவடிக்கையானது ஈராக் யுத்தத்தின் போது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுததலாம் என்ற உண்மையை வெளிப்படுத்துவதாகவும் போல்டன் மேலும் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

### வாகனங்கள் விற்பனைக்கு உண்டு

டாக்டரின் பாவனையிலுள்ள C 90 Honda மோட்டார் சைக்கிள் மற்றும் FORD Escort Car விற்பனைக்கு உண்டு. எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் பின்வரும் இடத்தில் பார்வையிடலாம். V.ஜெயக்குமார், 29 செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (216)


# அதிரடியில் 3 இஸ்ரேலிய சிப்பாய்கள் பலி உலங்கு வானூர்திகள் பதில் தாக்குதல்

இஸ்ரேலிய விமானப்படையின் தாக்குதல் உலங்கு வானூர்திகள் காஸாப் பள்ளத்தாக்கில் பலஸ்தீனப் பேராளிகளின் இலக்குகள் மீது தாக்குதலினை நடாத்தியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை பலஸ்தீனப் பேராளிகள் மறைந்திருந்து நடாத்திய அதிரடித் தாக்குதலில் 3 இஸ்ரேலியப் படையினர் கொல்லப்பட்டிருந்தனர். இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே இஸரேலிய உலங்கு வானூர்திகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றன

இஸ்ரேலிய உலங்கு வானூர்திகளால்- உலோகத் தொழிற்சாலை, தேவால்யம் என்பன தாக்கப்பட்டன. இதில் நான்கு பலஸ்தீனப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.


இரவு நேரத் தாக்குதலால் வெளிச்சமாகும் காஸாப்பகுதி.

# ஆயுதப் பரிசோதகர்களுடன் ஒத்துழைக்குமாறு ஆறு அரபு நாடுகள் ஈராக்கிடம் வேண்டுகோள்


துருக்கியில் அரபு நாடுகளின் தலைவர்கள்

ஈராக் - ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என ஆறு அரபுநாடுகள் கேட்டுள்ளன.

துருக்கியில் நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கில், மத்திய கிழக்கு நாடுகளான ஈராக், எகிப்து, சிரியா, சவூதி அரேபியா மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இவ் வேண்டுகோளை விடுத்தனர்.

இந்த ஆறு அரசுகளில் ஐந்து நாடுகள் ஈராக்குடன் எல்லைகளைப் பகிர்ந்து கொள்பவையாகும். மேலும் 1991 ஆம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின்போது ஜோர்தான் மற்றும் ஈரான தவிர்ந்த ஏனைய நாடுகள் குவைதில் இருந்து ஈராக் வெளியேற வேண்டும் என வலியுறுத்தி வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மத்திய கிழக்கு நாடுகள் இவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட்டமை, ஈராக் மீதான தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ள அமெரிக்காவுக்கும் அழுத்தத்தை ஏற்படுத்தி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.



வெனிசுவெலாவில் ஜனாதிபதி சாவேஸுக்கு ஆதரவான பேரணி இது.


நாளை

யாழ் பல்கலைக்கழக
கைலாசபதி கலையரங்கில்

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்

திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்



ஜர்கொலோ சதுரர்
- நடன நாடகம்

கலக்கி மண்ணுலகை அலைக்கும் என்றாலும்
குலுக்கி விண்வெளியைக் குலைக்கும் என்றாலும்
இலட்சியம் நோக்கிய பயணம் ......

எழுத்துருவாக்கம்
சாந்தினி சிவநேசன்
தவநாதன் றொபேட்
சா.சிவயோகன்
இ.முருகையன்
குழந்தை ம.சண்முகலிங்கம்

ஊடக அனுசரணை
நமது ஈழநாடு

உலகவலம்

வாசகர்களே, வாடிக்கையாளர்களே!

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு
உங்களுக்கு அருகிலேயே இனி
எமது விளம்பர முகவர்.

நமது ஈழநாடு விளம்பர முகவர்

சுன்னாகத்தில்

பொ.அனுரா
டிலெக்ஸ்
ரெலிகொம்
இல.24, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

தொலைபேசி இல.
222-3568, 222-3569,
0777-722661
தொலைநகல் இல.
222-3568



பலரும் தேடிய
நாடகநூல்
கந்தன் கருணை
வெளிவந்துவிட்டது
தொடர்பு:-
வசந்தம்
புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-525)

ராஜா
யாழ்ப்பாணம்.
இலங்கையிலும்
இந்தியாவிலும்
ஒரே தின
வெளியீடு
விஜய், ஸ்நேகா
நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-398)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜய், சிந்து நடித்த
நெஞ்சினிலே
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
TOMB RAIDER (சி-397)


## இன்றைய நாள் இனிய நாள்

**25-01-2003 - சனிக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- காரிய வெற்றி, திரவிய லாபம், உடல்நலக் குறைவு, அதிக பிரயாசை |
| இடபம | :- பெரியோர் ஆதரவு, தொழில் சிறப்பு, சோர்வு, சிறைப் பயம். |
| மிதுனம் | :- பகைமை, பிரயாணம், குடும்பச்சிறப்பு, தனலாபம், களஸ்திர சுகம். |
| கர்க்கடகம் | :- தேகசுகக்குறைவு, பிரிவுத்துயர், மனக் கவலை, பொருட் சேதம் |
| சிங்கம் | :- திரவியலாபம்., பணச்செலவு, குடும்ப நன்மை, லட்சுமி கரம் |
| கன்னி | :- மகிழ்ச்சி, அதிக பிரயாசை, தனவரவு, சிநேக நன்மை, நற்குணம் |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- மனக் கவலை, தொழில் சிறப்பு, திரவிய லாபம், குடும்ப சுகம் |
| விருச்சிகம் | :- களஸ்திர சுகம், பொருள் வரவு, மகிழ்ச்சி, பெரியோர் மதிப்பு |
| தனு | :- மனக்கிலேசம், சத்துருபீடை, பொருட்சேதம், அதிக கஷ்டம். |
| மகரம் | :- புத்திரரால் நன்மை, பொன் பொருள் சேர்க்கை, வாகன யோகம். |
| கும்பம் | :- சத்துரு பீடை, சிறைப்பயம், தேகசுகக் குறைவு, தொழில் கஸ்டம். |
| மீனம் | :- தன வரவு, பூமியால் நன்மை, காரிய சித்தி, உடற்சோர்வு |

# தமிழ்ப் பகுதியில் மின்சாரசபை எதிர்த்து முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்!

## மட்டக்களப்பு - ஏறாவூரில் சம்பவம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் பிரதேசத்தில் நேற்று முன் தினம் காலை 9.45 மணிக்கு வைப வரீதியாக மின்சாரசபைக் காரியால யம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது பிரதம அதி





தமிழ்ப்பகுதியில் மின்சாரசபைக் காரியாலயம் அமைக்கப்பட்டதைக் கண்டித்து குழுமி நின்ற முஸ்லிம் மக் களை முதலாவது படத்திலும் கூட்டத்தைக் கலைந்துபோகச் சொல்லும் படையினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

திகளாகத் திருமலை கிழக்குப் பிராந்தி யப் பிரதம பொறியியலாளர் தவ நேசன், தமிழீழ விடுதலைப் புலிக ளின் ஏறாவூர்ப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், பிரதிப் பொது முகாமையாளர் தனபாலன், மின் பொறியியலாளர் பரஞ்சோதி, மின் அத்தியட்சகர் சிவலோகநாதன், ஆகியோரும், அப்பிரதேசப் பொதுமக் களும் கலந்துகொண்டனர்.

இக்காரியாலயம் ஏறாவூர்ப் பிர தேச செயலகக் கட்டடத்தில் தற்காலி கமாகக் கடந்த சில காலங்களாக இயங்கிவந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, மின்சாரசபை இட மாற்றத்தினை எதிர்த்து ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுரம் அமைந்துள்ள பிரதான வீதியில் 500 இற்கும் மேற் பட்ட முஸ்லிம் இளைஞர்கள் அவ் வீதியில் அமர்ந்தபடி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

அவர்கள் ஆர்ப்பாட்டத்தின்போது மின்சாரசபை தங்களுக்குரியது, அதனை இடமாற்றம் செய்ய ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் எனும் கோஷங்களை எழுப்பினர்.

இதன் காரணமாக நேற்று முன் தினம் 9.45 மணி தொடக்கம் 11 மணி வரையில் ஏறாவூர்ப் பிரதேசத்தினூ டாக மேற்கொள்ளப்படும் போக்கு வரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. இதனால் மக்களுக்கு பெரும் சிரமங்களும், அசௌகரியங் களும் ஏற்பட்டன.

இன்றையதினம் ஏறாவூர் முஸ் லிம் மக்களுக்கு ஆதரவாகக் காத்தான் குடி முஸ்லிம் மக்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

அத்துடன், மேற்படி முஸ்லிம்க ளின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்துத் தமிழ் இளைஞர்களாலும் தமது பகுதியிலிருந்து எதிர்ப்பு ஆர்ப்பாட் டம் நடாத்தப்பட்டது.

இதன்போது குழப்பங்கள் ஏற்படு வதைத் தவிர்க்கப் பொலிஸ், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

இது இவ்வாறிருக்க - மின்சார சபைத் திறப்பிற்கு எதிரான முஸ் லிம் மக்களின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்து கிராம அபிவிருத்திக் குழு வினரால் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலிஸாகிர் மௌலானாவுக்குப் புகார் மனு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது.

# ஜப்பானின் முயற்சியை எதிர்க்கும் இந்தியா; கருத்துத் தெரிவிக்க ஜனாதிபதி மறுப்பு!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை ஜப்பா னிய அரசாங்கம் உதவுவது பற்றி யும், அதனை இந்தியா எதிர்ப்பது பற்றியதுமான விவகாரம் பற்றித் தான் கருத்து எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை எனவும், இவ்விடயத் தில் தான் சம்பந்தப்படவில்லை என வும், ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத் தினை அவரது பேச்சாளர் ஹரீம் பீரிஸ் வெளியிட்டார்.

அண்மையில் ஜப்பானிய அர சாங்கத்தின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி இலங்கை வந்திருந்தபோது- தனக்கு நேரமின்மையால் அவ ரைச் சந்திக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறுத்தது தெரிந்ததே.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் ஜப்பானே முதலிடம் வகிப் பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இந்த விவகாரம் பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்காவின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், அமைதிப் பேச்சுக்க ளுக்கு ஜப்பான் உதவுவது பற்றிய தனது எதிர்ப்பை இநதியா இன்ன மும் உத்தியோகபூர்வமாக விடுக்க வில்லை எனவும் கூறினார்.

## பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவதை தடுக்கும்

# இராணுவத்தின் நிலைப்பாட்டிற்கு வவுனியாவில் புலிகள் எதிர்ப்பு

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப் புலி கள் மற்றும் இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் காலை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின அலுவலகத்தில் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு இருமணி நேரம் நீடித்தது. விடுதலைப்புலிகளின் தரப்பில் வவு னியா அரசியற் பொறுப்பாளர் எழி லன் மற்றும் கதிரவன் ஆகியோர் பங்குகேற்றனர்.

இராணுவத்தரப்பில் வன்னிப் பிராந்தியக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால மற்றும் இராணுவ அதிகாரிகளும் பொலிஸா ரின் தரப்பில் பிரதிப்பொலிஸ்மா அதிபர் தர்மரட்ண, சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் வில்பிரட் மகாநாயக்க ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டைச் சுமு கமான வகையில் நடைமுறைப்ப டுத்துவது தொடர்பாகவே இச்சந் திப்பு நடத்தப்பட்டதாக போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது இராணு வத்தரப்பு, பெண்போராளிகள் இடுப் புப்பட்டி கட்டிக்கொண்டு வருவதற்கு எதிர்ப்புத தெரிவித்தது. பெண் போரா ளிகள் இடுப்புப்பட்டி அணியக் கூடாது என்று இராணுவத்தரப்பினர் கூறியதற்குப் புலிகள் கடும் எதிர்ப் புத் தெரிவித்தனர்.

இதையடுத்து இருதரப்பும் தத் தமது உயர்மட்டத் தலைமைக்கு இவ விடயத்தைத் தெரியப்படுத்திப் பிரச் சினைக்குத் தீர்வு காண்பதென முடிவு செய்யப்பட்டது.

## நெல்லியடியில் செய்தியாளர் தாக்கப்பட்ட சம்பவம்

# பொலிஸ் அதிகாரியை விசாரணைக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பு

நெல்லியடியில் செய்தியாளர் பொலிஸாரால் தாக்கப்பட்டது குறித்த விசாரணை எதிர்வரும் 30 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடியில் கடந்தமாதம் 10 ஆம் திகதி ஈ.பி.டி.பியினருக்கு எதி ராக மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டபோது செய்தி சேகரிக்கச் சென்ற ஐ.பி.சி செய்தியாளர் தவச்செல்வம் பொலிஸாரால் தாக்கப்பட் டார். இச்சம்பவம் குறித்து மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவல கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாடு குறித்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜானகக குணதிலகவை மனித உரிமை ஆணைக்குழுவினர் விசாரணைக்கென எதிர்வரும் 30 ஆம் திகதி அழைத்துள்ளனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### மாநகரசபை மாதாந்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் மாதாந் தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 10 மணிக்கு இந்து விடுதியில் மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் தலைமையில் நடைபெறும்.

(ச)

### மாணவ முதல்வர் தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் இந்து மகளிர் கல்லூரி மாணவ முதல்வர்களுக்கான தலை மைத்துவ விருத்திப் பயிற்சிப் பட்ட றையொன்று இன்றும் நாளையும் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிப் பட்டறையில் பல்வேறு துறைசார் வல்லுநர்கள் கலந்து கொண்டு உரை யாற்றவுள் ளனர். இதன் 2ஆம் நாள் நிகழ்வில் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

### நுளம்புப் பெருக்கத்தால் தீவிரமாகும் மலேரியா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள கரவெட்டி, தும்பளை, துன்னாலை, நெல்லண்டைப் பகுதிகளில் நுளம் பின் பெருக்கம் அதிகரித்துள்ளதாக வும் இப்பகுதியில் இருந்து தினமும் மலேரியா நோயினால் பீடிக்கப்படு வோர் மந்திகை வைத்தியசாலை யில் சிகிச்சை பெறுவதாகவும் மந் திகை வைத்தியசாலை வட்டாரங் கள் தெரிவித்தன.

(09)

### ஊரெழு, கரந்தனில் உருளைக்கிழங்கு செய்கை அமோகம்

(ஊரெழு)

ஊரெழு, கரந்தன் பகுதிகளில் விவசாயிகள் இவ்வருடம் உரு ளைக்கிழங்குச் செய்கையில் அமோக விளைச்சலை ஈட்டியுள்ள னர்.

கடந்த 7 வருடங்களின் பின்னர் இவ்வருடம் சமாதானச் சூழல் ஏற்பட டுள்ளதை அடுத்து ஏ-9 வீதியூடாக விதை உருளைக்கிழங்கு உரவகை கள் மற்றும் கிருமிநாசினி வகைகள் போதியளவு எடுத்து வரப்பட்டதை அடுத்து விவசாயிகள் செய்கையில் முழுக் கவனம் செலுத்தியமையால் அமோக விளைச்சலைப் பெற்றுள்ள னர்.

(96)

### பெயரளவில் இயங்கும் யாழ். செயலகத்தின் தகவல் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் இயங்கும் யாழ்ப்பாணத்திற்கான தகவல் திணைக்கள அலுவலகம் பெயரள வில் மட்டும் இயங்கிவருவதாக் செய்தியாளர்கள் விசனம் தெரிவிக் கின்றனர். குறிப்பிட்ட செயலகத்தில் கணினி, இன்ரநெற், ஈ-மெயில் வச திகள் இருந்தும் இவை சீராக இயங் கவில்லை எனத் தெரிவிக்கப்படுகி றது.

இவற்றை சீராக்கி செய்தியாளர் களிற்கு இவற்றைப் பயன்படுத்த வசதி கிடைக்குமா எனச் செய்தி யாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

(09)

### கூட்டணியின் மாதாந்தக் கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்டத்திற்கான மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லி வீதியில் உள்ள கட்சியின் பணிமனையில் 10 மணிக்கு இடம் பெறும் என கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

(09)

### தெல்லிப்பளை பிரதேச செயலராக பீதாம்பரம்!

(பன்னாலை)

தெல்லிப்பளை பிரதேச செயல கத்தில் பிரதேச செயலராகக் கடமை யாற்றி வந்த திருமதி ப.திலகநா யகம் போல் யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளதை அடுத்து அவரின் இடத்துக்கு க.பீதாம்பரம் உதவிப் பிரதேசச் செயலராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

(72)

### மகாஜனக் கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

(பன்னாலை)

தெல்லிப்பளை மகாஜனக் கல் லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர்ப்போட்டி இன்று பி.ப.1 மணிக்கு அதிபர் சுந்தரலிங்கம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தின ராகப் பூரணச்சந்திரனும், சிறப்பு விருந்தினர்களாகத் தெல்லிப்ப ளைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரபாலன், யாழ். மாவட்ட அரசியலதுறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(72)

### உரும்பிராயில் மணவாளக்கோல திருவிழா

உரும்பிராய் கருணாகரப்பிள் ளையார் கோயில் கும்பாவிஷேகத்தின் சங்காபிஷேகம் இன்று சனிக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

1008 சங்குகளால் கருணாகரப் பெருமானுக்கு அபிஷேகமும், தொடந்து அடியார்களுக்கு அன்ன தானமும் இடம்பெறும்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திரு முருகன் ஆசிரியர் "விநாயகனே விணணுக்கும் மண்ணுக்கும் நாதன்" என்ற பொருளில் பிற்பகலில் சொற் பொழிவாற்றுவார். மாலை ஆறு மணியளவில் கலாபூஷணம் தேவார இசைமணி தாவடியூர் எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பக்கவாத்திய சகிதமாகப் பண்ணிசை விருந்தளிப் பார்.

### பொது அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக் கத்தின் இலங்கைக்கிளை சென்ற ஆண்டு நடாத்திய திறந்த பொது அறிவுப்போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி போட்டியில் வேம்படி மக ளிர் கல்லூரியைச் சேர்ந்த ஷாலினி திருக்கேதீஸ்வரன் 1 ஆம் இடத் தையும், கலைமகள் வீதி, நல்லூ ரைச் சேர்ந்த கு.அரசேஸ்வரன் 2ஆம் இடத்தையும், கொழும்புத் துறையைச் சேர்ந்த அனுசியா கதிர்காமதாசன் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட போட்டியா ளர்கள் தமிழ்நூல்களைப் பரிசில்க ளாகப் பெறவுள்ளனர். சித்திய டைந்த அனைவருக்குமான சான் றிதழ்கள் மற்றும் தெரிவு செய்யப் பட்டோருக்கான பரிசில்கள் என்பன விரைவில் நிகழ்ச்சியொன்றில் வைத்து வழங்கப்படவுள்ளதாக இலங்கைக் கிளைத் தலைவர் ஆ.சண்முகலிங் கம் அறிவித்துள்ளார்.

### தையற் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட தையல் பயிற்சியின் J/109 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் கண்காட்சியும் விற்பனையும், இன்று காலை 8.30 மணிக்கு நல்லூர் ஸ்சாதனா சி.சி.ரி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங் கத் தலைவி திருமதி புஸ்பமதி மன்மதராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

(55)

# ஊடகங்களின் அவசரத்துக்குப் பேச்சுக்களை நகர்த்தமுடியுமா?

*(நேற்றைய தொடர்ச்சி....)*

சில ஊடகவியாளர்களின் கேள்விகள் சிண்டு முடிந்துவிடும் தன்மை



யைக் கொண்டனவாகவும் அமைந்திருந்தன.

ஆனால், பேச்சுக்களின் முடிவுகளை அறிவிக்கும் விடயத்திலும், ஊடகவியலாளரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விடயத்திலும் இருதரப்பினருமே மிக அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்கத் தவறவில்லை.

ஒரு சமயத்தில் பேராசிரியர் பீரிஸ் சொன்னார் "இது நீண்டகாலப் பிரச்சினை. படிப்படியாகவே அதனைத் தீர்க்கமுடியும். இதற்கு நீண்டகாலம் பிடிக்கும்." ஒவ்வொரு சுற்றுப் பேச்சுக்களின் முடிவிலும் ஏதாவது புதிய முடிவு தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படவேண்டும் என்று எதிர்பார்ப்பது பொருத்தமில்லை என்று, யதார்த்தத்தை விளக்கிய பீரிஸ்,

சில உலகநாடுகளின் உதாரணங்களையும் குறிப்பிட்டு ஊடகவியலாளர்களுக்கு இதனை விளக்க வேண்டியிருந்தது.

"தென்னாபிரிக்காவில் பிரச்சினையைத் தீர்க்க ஏழு வருடங்கள் பிடித்தது. அயர்லாந்தில் எவ்வளவு காலம் பிடிக்கிறது. நமது விடயத்தில்

**சடாயு**

மட்டும் இவ்வளவு அவசரம் காட்டுவது பொருத்தமில்லை. ஏனைய நாடுகளில் ஏழு வருடங்கள் பிடித்த விடயத்தை நாம் ஏழு மணித்தியாலங்களுக்குள் தீர்த்து விடமுடியும் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்?" என்று ஊடகவியலாளர்களிடம் பதில் கேள்வி தொடுத்தார் பேராசிரியர் பீரிஸ்.

இதே கருத்தை ஒட்டியதாகவே விடுதலைப் புலிகளின் தரப்புப் பிரதிநிதிகளுக்குத் தலைமை தாங்கிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கருத்துக்களும் அமைந்திருந்தன. இது தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், இந்த விடயத்தில்தான் பேராசிரியர் பீரிஸின் நிலைப்பாட்டை ஆமோதிப்பதாகக் கூறினார். ஒரு சமயம் ஊடகவியலாளாகளைச் சந்தித்த அவர், ஊடகவியலாளர்களிடம் உருக்கமான ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

"தயவுசெய்து பொருத்தமான பரயோசமான கேள்விகளைக் கேளுங்கள். தேவையற்ற கேள்விகளைக் கேட்காதீர்கள். நீங்கள்தான் மக்களுக்குச் செய்திகளை எடுத்துச் செல்பவர்கள். ஆகவே, அவர்களுக்குப் பிரயோசனமளிக்கக்கூடிய கேள்விகளைக் கேளுங்கள்" என்று ஊடகவியலாளர்களை நெறிப்படுத்தினார் ஒரு முன்னாள் ஊடகவியலாளரான அன்ரன் பாலசிங்கம் அவர்கள்.

ஊடகங்களைப் பொறுத்தவரையில் அவற்றுக்கு ஒரு பிரதான பிரச்சினை உண்டு. பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் தினசரியும், ஏனைய இலத்திரனியல் ஊடகங்களைப் பொறுத்தவரையில் நிமிடத்துக்கு நிமிடமும் ஏதாவது விறுவிறுப்பான செய்திகளை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்கின்ற அவசரம் அவற்றுக்கு உண்டு. இதற்குள் ஊடகங்களுக்கிடையிலான போட்டியும் காணப்படுகிறது. இவையெல்லாம் சேர்ந்து புதிய புதிய செய்திகளுக்கான தேவையை அதிகரிக்கச் செய்கிறது.

இவை தவிரவும், செய்தியை முந்திக்கொண்டு கொடுக்க வேண்டும் என்கின்ற அவசரம், ஏனைய ஊடகங்கள் சொல்லாத விசேடமான ஏதாவது விடயங்களைச் சொல்ல வேண்டும் என்கின்ற ஆவல் எல்லாம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர்களைத் திக்குமுக்காடச் செய்கின்றன. பொது அரங்கில் மட்டுமன்றி தனிப்பட்ட வகையிலும் பேச்சுக்களில் ஈடுபட்டவர்களைத் தனியே சந்தித்து ஏதாவது பிரத்தியேகமாகத் தமது ஊடகங்களில் வெளியிட வேண்டும் என்று ஊடகவியலாளர்கள் தவிக்கிறார்கள்.

இதெல்லாம் ஊடகங்களைப்




பொறுத்தவரையில் சாதாரணமான விடயங்களாக இருக்கலாம். ஆனால், நீண்டகாலம் புரையோடிப்போன ஒரு பிரச்சினையைத் தீர்க்க முயல்பவர்களைப் பொறுத்தவரையில் இந்த அவசரம் பல சங்கடங்களை ஏற்படுத்தமுடியும். ஊடகங்கள் ஏற்படுத்தும் அவசரத்தால் சில பொருத்தமற்ற முடிவுகள் வெளியிடப்படவும் வாய்ப்புண்டு.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் இன்று அனைவரும் வேண்டி நிற்பது ஒரு அமைதியான நிலைத்த சமாதானத்தையே. பேராசிரியர் பீரிஸும், கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் இம்முறை ஊடகவியலாளர்களுடனான சந்திப்புக்களின்போது அடிக்கடி வலியுறுத்திக் கூறியது போல இந்த முரண்பாடு மிகவும் சிக்கல் வாய்ந்தது. மிக நீண்டகாலமாகத் தீர்க்கமுடியாத ஒன்றாக இருந்து வந்த ஒன்று. இன்று அதனைத் தீர்ப்பதற்கான ஒரு பொன்னான வாய்ப்புக் கிட்டியுள்ளது. பொன்முட்டையிடும் வாத்தின் வயிற்றைக் கிழித்துப் பார்ப்பதுபோல அவசரப்பட்டுச் சமாதானத்தைச் சாகடிக்கும் காரியத்தை யாரும் செய்துவிடக்கூடாது.

★

# அடிப்படை வசதிகள் ஏதுமின்றி அவலப்படும் புங்குடுதீவு மக்கள்!



செய்திக் கட்டுரை

இடம்பெயர்வுக் காலத்தின் முன்னர் பொன்கொழிக்கும் தீவாக விளங்கிய புங்குடுதீவுப் பகுதியானது இன்று சோபையிழந்து போதிய வசதிகளின்றி காணப்படுகிறது. யாழ். பெருநிலப்பரப்புடன் தரைவழியாகத் தொடர்புபட்டுள்ள ஏனைய தீவுகளைவிட, இத்தீவில் வசிக்கும் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையினைச் கொண்டுசெல்லக்கூடிய அடிப்படை வசதிகளான மருத்துவம், கல்வி, குடிநீர் வசதி, மற்றும் தொழில் முயற்சிகள் போன்றவற்றைக்கூட பூர்த்திசெய்ய முடியாதவர்களாகக் அல்லலுறுகின்றனர்.

1991 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் காரணமாகப் புங்குடுதீவில் இருந்து 95 சதவீதமான மக்கள் சொந்த மனைகள், விளை நிலங்கள், ஆதரவு தந்த கடல் அன்னை எல்லாவற்றையும் விட்டு, உயிர் காக்க ஓடிச்சென்றனர்.

அவ்வேளையில் அங்கே மீதியாக இருந்தவர்கள் - வயது முதிர்ந்தவர்களும், அவர்கள் வளர்த்த கால்நடைகளும்தான். இதன் காரணமாக அப்பகுதிக்கான வைத்திய சேவை, கல்வி, நிர்வாக சேவை எல்லாம் முன்றாகவே செயலிழந்தன.

பின்னர் 1998 காலப்பகுதிக்குப் பின்னர் - மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக மீளக் குடியமரத் தொடங்கினர். ஆனால், அக்காலத்தில் அவர்களுக்கான அடிப்படை வசதிகளேதும் இருக்கவில்லை.

ஆனால் - இன்று சமாதானச் சூழல் தோன்றியதை அடுத்து தற்போது பெருந்தொகையான மக்கள் மீளக் குடியமரத் தொடங்கிவிட்டனர்.

"நாம் இத்தனை காலமும் அனுபவித்த, சந்தித்த துயரங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளி கிடைக்கும்" என வந்த அவர்கள் இடப்பெயர்வு நடைபெற்ற கடந்த 12 ஆண்டு காலத்தின் பின்பு இப்போது "நாம் முன்பு இருந்ததைவிட 100 வருடங்களுக்குப் பின் நோக்கிச் சென்றுவிட்டோம்" என்று பெரும் ஆதங்கப்படுகிறார்கள்.

யாழ். குடாநாட்டைவிட்டுத் தரைவழித்தொடர்பு ரீதியாகத் தொலைவில் இருக்கும் மக்கள் தங்களது மருத்துவத் தேவைகளை தங்கள் தீவிலேயே பூர்த்தி செய்ய முடியாத நிலையில் தவிக்கின்றார்கள்.

சகலவிதமான கட்டட வசதிகளையும் உள்ளடக்கியுள்ள புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் ஒரு நிரந்தரமான வைத்தியரோ, அல்லது பொறுப்பு வாய்ந்த மருத்துவத் தாதியரோ இதுவரைக்கும் நியமிக்கப்படவில்லை.

தற்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 9 மணி தொடக்கம், பி.ப. 1 மணிவரைக்கு



வசதிகளற்ற வைத்தியசாலையின் ஒரு பகுதி.

மான மருத்துவச் சேவையினை ஓய்வின் பின் மீள வேலைக்கமர்த்தப்பட்ட ஒரு வைத்தியரே செய்துவருகின்றார்.

இச்சேவையின் மூலம் மக்கள் தமது முழுமையான மருத்துவ சேவையினைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளதுடன் - இரவு வேளையில், மற்றும் அவசர நோயாளர்களை வைத்தியர் இல்லாத காரணத்தினால் - பெரும் சிரமப்பட்டுச் சீரான போக்குவரத்தின்மை மத்தியிலும் வேலணை, மற்றும் யாழ்ப்பாண வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியநிலை காணப்படுகின்றது.

அண்மையில்கூட கர்ப்பிணித் தாயொருவரை இரவுவேளை பிரசவத்திற்காகப் பெரும் கஷ்டத்தின் மத்தியிலேயே யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல வேண்டி வந்தது.

அத்துடன், சேவை நடைபெறும் செவ்வாய், வெள்ளி தினங்களைத் தவிர ஏனைய நாட்களில் வைத்திசாலையில் எவருமே இருப்பதில்லை. அங்கு ஆடு, மாடுகள்தான் தங்கியுள்ளன.

தற்போது உள்ளூரிலே தனியார் மருத்துவநிலையம் வசதியான மக்களுக்கு ஓரளவு கைகொடுத்துதவுவதாகவும், வாரந்தோறும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் "லயன்ஸ் கிளப்" ஆதரவில் மேற்கொள்ளப்படும் மருத்துவமுகாம் மூலம்தான் ஏனைய மக்கள் பயன்பெறுவதாகவும், இச்சேவையானது தமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் எனவும் அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறாக புங்குடுதீவு வாழ் மக்கள் தமது மருத்துவத் தேவையினைப் பெரும் சிரமப்பட்டே பெறுகின்றனர்.

அத்துடன், குடிநீர்ப் பிரச்சினையும் அங்குள்ளது. மழை காலத்தில் சேகரிக்கும் மழை நீரும், நன்னீர்க் கிணறுகளில் உள்ள நீருமே பயன்பாட்டிற்குரியதாகின்றன. ஆனால் - ஏனைய காலத்தில் குடிநீருக்குப் பெரும் கஷ்டப்படவேண்டியிருககிறது. வேலணைப் பிரதேச சபையினால் வழங்கப்படும் பவுசர் மூலமான நீரும்



சீரான முறையில் கிடைப்பதில்லை எனவும், குடங்களை அடுக்கி வைத்துக்கொண்டு நீண்டநேரம் காத்திருக்க வேண்டியிருப்பதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

அத்துடன் பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் பற்றாக்குறை மற்றும் போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக வெளியிடங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் வேளைக்கே பாடசாலையைவிட்டுச் செல்வதாகவும் மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாக்கப்பட்டுச் சமாதானச் சூழலை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற வேளையிலும், இங்குள்ள கடற்படையினரின் 'பாஸ்' நடைமுறை இன்னும் நீக்கப்படவில்லை.

அடுத்து - மின்சார வசதி இன்னமும் மேற்கொள்ளப்படவில்லையெனவும், ஏற்கனவே போடப்பட்டிருந்த கேபிள்கள், கம்பங்கள் எல்லாம் தற்போது மின்சார சபையினரால் அகற்றப்பட்டு வேறு இடங்களுக்கு மின்னிணைப்புக்காகக் கொண்டு செல்லப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இத்தனை துன்பங்களையும் பார்த்துத்தான் மேலும் மக்கள் வந்து மீளக்குடியமராமல் இருப்பதாகவும், இப்படியே மீளக்குடியமராமல் இருந்தால் - தற்போதைய நிலையைவிட பின்னோக்கித்தான் செல்ல வேண்டும் எனவும், இங்கிருந்து இடம் பெயர்ந்த அனைத்து மக்களும் மீளக் குடியமரும்போதுதான் மக்[…] அழுத்தம் கொடுத்து எமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் - புங்குடுதீவு வாசி ஒருவர் மக்களுக்கு அறைகூவல் விடும் தொனியில், உணர்வுபூர்வமாகத் தெரிவித்தார்.

எனவே, சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைப்பு நல்கி மக்களது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து, மீண்டும் வளமான புங்குடுதீவை உருவாக்க ஆவன செய்யவேண்டும்.

**- கண்ணன்.**

# வார்த்தை விளையாட்டு - 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | | 2 | | | ■ |
| ■ | 3 | ண் | | | 4 |
| 5 | 6 க | | ■ | 7 | |
| 8 | | 9 தி | ■ | | 10 க |
| | | | ■ | 11 | |
| 12 | | | 13 ட | | |

**இடமிருந்து வலம்**

1. பூமியின் உப கோள்.
3. தம்பிக்கு மூத்தவன்.
6. அம்பு.
7. யானையின் ஒத்த சொல்.
8. பொலிஸார் வைத்திருக்கும் கம்பு.
11. திருமணத்தின் போது மணப்பெண்ணுக்குக் கட்டுவது.
12. இராமனைக் காட்டுக்கு அனுப்பிய பெண்.
13. பன்னிரண்டு பொருட்களை இப்படியும் சொல்வார்கள்.

**மேலிருந்து கீழ்**

2. பழங்கால வீடுகளில் இருப்பது.
4. மழைபெய்யும் காலம்.
5. உரலின் சோடி.
6. வெட்டும் ஆயுதம்.
7. ஒரு எழுதுபொருள்.
9. நவதானியங்களில் ஒன்று.
10. ஒரு யுகம்.

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

.............................. ..............................

கையொப்பம் திகதி

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி
உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 29-01-2003
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 16

இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**செல்வராசா கஜந்தன்**
அப்பிளானை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

*2ஆம் பரிசு -*
**ந.கௌசிகன்**
கண்ணபுரம் - 7,
வேலணை.

*3ஆம் பரிசு -*
**கணேசரட்ணம் பகீரதன்**
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## வார்த்தை விளையாட்டு - 16
## சரியான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கடவுள் | 1. கணினி |
| 2. இன்பம் | 2. இரவு |
| 4. மரக்கறி | 3. பகலவன் |
| 6. காலன் | 5. அரிசி / சோறு |
| 7. தகவல் | 6. காகம் |
| 8. சிரி | 7. தடை |



# சிறுவர் அரங்கம்

## கெடுவான் கேடு நினைப்பான்

காட்டுராஜா சிங்கத்துக்கு நோய் கண்டது. அது குகையைவிட்டு வெளியே வரமுடியாமல், நீண்ட நாட்களாக படுக்கையில் கிடந்தது. இருந்தாலும் அதன் கோபம் மட்டும் குறையவில்லை. காட்டிலுள்ள எல்லா மிருகங்களும் வந்து சிங்கராஜாவின் உடல் நலம் பற்றி விசாரித்துச் சென்றன.

ஆனால், நரி மட்டும் சிங்கத்தின் கண்ணில் படாமல் இருந்தது. என்றாலும், சிங்கத்தின் குகையில் நடப்பதை எல்லாம் மறைவாய் இருந்து கவனித்து வந்தது. ஓநாய்க்கும் நரிக்கும் என்றுமே பகை. ஒருநாள் ஓநாய், நரியைப் பற்றி சிங்கத்திடம் பேசிக் கொண்டிருந்ததை நரி ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தது.

ஓநாய் சிங்கத்திடம், 'அரசே! தங்களைக் காட்டிலுள்ள எல்லா மிருகங்களும் வந்து பார்த்தன. ஆனால், நரி மட்டும் வந்து பார்க் காமல் ஏமாற்றிவருகிறது'. என்றது. அதைக்கேட்டு சிங்கம் உறுமியது. "என்ன காரணம்?" என்று கேட்டது.

"நரி தங்களுக்கு விரோதமர்க ஏதோ சதிசெய்கிறது" என்று ஓநாய் சொல்லிற்று.

சிங்கம் கோபமாகக் கர்ஜித்து ஓநாயிடம் "அந்த நரியை உடனே இழுத்து வா" என்று கட்டளையிட்டது.



ஓநாய் நரியைத் தேடிக் கண்டுபிடித்து, சிங்கத்திடம் அழைத்து வந்தது. நரியைக் கண்டதும் சிங்கம் கோபமாக "நீ ஏன் இதுவரை என்னை வந்து பார்க்கவில்லை? காரணம் கூறு" என்று அதட்டிக் கேட்டது.

சிங்கத்திடம் நரி, "ராஜாவே! மன்னிக்க வேண்டும். தங்களை அவமதித்து வராமலில்லை. உங்கள் நோய் தீர வேண்டுமே என்பதற்காக பல வைத்தியர்களை நாடு பூராவும் தேடி அலைந்து பார்த்து அவர்களிடம் வைத்தியம் பற்றி விசாரித்து வந்தேன்" என்று கூறியது.

சிங்கம், "அப்படியா? மிக்க மகிழ்ச்சி. வைத்தியர்கள் என்ன சொல்கிறார்கள்?" என்று கேட்டது.

நரி ஓநாயை அலட்சியமாகப் பாத்துக் கொண்டே சிங்கத்திடம், "மகாராஜாவே! உங்கள் நோய் தீருவதற்கு ஒரே ஒரு வைத்தியம் தான் இருக்கிறதென்று எல்லா வைத்தியர்களும் கூறுகிறார்கள். அதாவது ஒரு புதிய ஓநாய்த் தோலை உங்கள் மீது போர்த்த வேண்டும்" என்று சொல்லியது.

அதைக் கேட்ட முட்டாள் சிங்கம் உடனே பக்கத்தில் இருந்த ஓநாயை அப்படியே பிடித்துக் கொன்றது.

# உங்கள் கைவண்ணம்



**சி.சிவநேசன்,**
தரம் - 10 C,
யா/ ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.



**இ.கௌரி நிஷா**
தரம் - 10
யா/ மெதடிஸ்த
பெண்கள் பாடசாலை.




**ச.பாரதி,**
தரம் - 8 A,
யா/ வடமராட்சி மத்திய
மகளிர் கல்லூரி.

# ஜேர்மனி (Federal Republic of Germany)

*தலைநகர்:* பொன், *மக்கள் தொகை:* 82 மில்லியன், *பரப்பு:* 3,57,000 ச.கி.மீ., *மொழி:* ஜேர்மன், *சமயம்:* கிறிஸ்தவம், *நாணயம்:* டொச் மார்க் , *அரசு:* கூட்டுக்குடியரசு.



*அதிபர்:* ஜோகன்னஸ் ரௌவ், *நாட்டின் தலைவர்:* சான்சிலர் ஜெர்ஹார்ட் ஷ்ரோடர்.

*அமைவிடம்:* வட மத்திய ஐரோப்பாவில் அமைந்துள்ள ஜேர்மனி வட கடல் மற்றும் போல்டிக் கடலில் கடற்கரை கொண்டுள்ளது. இதன் மேற்கில் பெல்ஜியம், லக்சம்பர்க் மற்றும் நெதர்லாந்து; வடக்கில் டென்மார்க்; கிழக்கில் செக்கோஸ்லேவாகியா, தென்கிழக்கில் ஆஸ்திரியா, தெற்கில் சுவிட்ஸர்லாந்து; தென்மேற்கில் பிரான்ஸ் எல்லைகளாக அமைந்துள்ளன.

*முக்கிய உற்பத்திப் பொருட்கள்:* விவசாயம் - பண்ணைப் பொருட்கள், கோதுமை, உருளைக்கிழங்கு.

உற்பத்தி - பதப்படுத்தப்பட்ட உணவு, மோட்டார் வாகனங்கள், வேதிப்பொருட்கள், மருந்துப் பொருட்கள். கனிமம் - நிலக்கரி.

*முக்கிய நகரங்கள்:* பேர்லின், பொன், லிப்சிக், ஹெய்ல். *முக்கிய ஆறுகள்:* ரீன், எல்பே, டான்யூப், ஒடெர், மோஸெல்லா, நெக்கர், ஹவேல், லெய்னே, வேஸர்.

ஜேர்மனி கி.மு. 500 இல் பழங்குடியினரால் உருவான நாடு. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மத நாடானது.

இரண்டு உலகப்போர்களுக்கும் ஜேர்மனியே காரணமாக இருந்தது. உலகப்போர்களை முதலில் துவக்கியதும் ஜேர்மனிதான். இரண்டிலும் தோல்வியடைந்து, பெரும் கஷ்டமும் நஷ்டமும் அடைந்தது.

சாதாரண போர் வீரனாக அரசியலில் நுழைந்து, பெரும் தலைவனானவர் அடொல்ப் ஹிட்லர்.

1929களில் ஜேர்மானியர்கள் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையை இழந்த நேரத்தில், தேர்தலில் வெற்றி பெற்று, ஆஸ்திரியாவில் பிறந்த அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் சான்ஸ்லர் ஆனார். இளமையிலேயே இராணுவத்தில் சேர்ந்த அவர் சிறையில் இருந்தபோது **Mein Gampe (My Struggle)** என்னும் நூலை எழுதினார். ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை அற்ற அவர், யூதர்களையும் கம்யூனிஸ்டுகளையும் அடியோடு வெறுத்தார். ஒரே இனம், ஒரே நாடு, ஒரே தலைவர் என்ற கொள்கையை அறிவித்து, தன்னை ஒரு சர்வாதிகாரியாக நிலைநாட்டிக் கொண்டார். மக்கள் தொகைப் பெருக்கத்தை ஆதரித்த அவர், ஜேர்மனியர்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி அளித்தார். எதிர்க்கட்சியினரை எதிரிக்கட்சியினராகக் கருதினார்.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஜேர்மனி இரண்டாக உடைந்தது. கிழக்கு ஜேர்மனிக்கும் மேற்கு ஜேர்மனிக்கும் அரசியல், பொருளாதாரக் கருத்து வேறுபாடுகள் காரணமாக 1961 இல் பேர்லின் சுவர் கட்டப்பட்டது. இதன் நீளம் 47 கி.மீ.

1989 நவம்பர் 9 இல் பேர்லின் சுவர் இடிக்கப்பட்டு, இரு நாடுகளும் இணைந்தன. 1990 அக்டோபர் 3 ஆம் திகதி அரசியல் ரீதியாகவும் இணைந்தது.

❖ தேவாலயத்தில் மெழுவர்த்தி ஏற்றும் பழக்கத்தை ஏற்படுத்தியவர்கள் ஜேர்மனியர்களே.

❖ ஜேர்மனியின் நிலப்பரப்பில் 33 சதவிகிதம் காடுகளே. அங்குள்ள 'கறுப்புக் காடுகள்' உலகப்புகழ் பெற்றவை.

❖ ஜேர்மனியக் கல்வித்துறைச் சீரமைப்பாளரான ஃபரைருரிச் ஃப்ரோபெல் (1782-1852) என்பவர்தான் முதன்முதலில் சுட்டிகளுக்கான கிண்டர் கார்டன் கல்வி முறையை உருவாக்கினார்.

❖ குவாண்டம் கொள்கையை ஜேர்மனிய இயற்பியல் வல்லுநரான மாக்ஸ் ஃப்ளாங்க் அறிமுகப்படுத்தினார்.

❖ ஜேர்மனியில் கொலோனி என்ற இடத்தில் கொலோனி தேவாலயம் ஒன்று உள்ளது. ரைன் நதிக்கரையில் அமைந்



துள்ள இந்தத் தேவாலயம் 1248 இல் தொடங்கி 1560 வரை நீண்டகாலம் கட்டுமானப்பணி செய்யப்படவில்லை. பிறகு மீண்டும் 1842 இல் தொடங்கி, 1880 இல் முழுவதுமாகத் திட்டமிட்டபடி கட்டிமுடிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 350 ஆண்டுகள் கட்டப்பட்டது இந்தத் தேவாலயம். அந்தக் காலகட்டத்தில் இதுவே உலகின் மிக உயர்ந்த கட்டடம்.

❖ கால்பந்து உலகக் கோப்பையை ஜேர்மனி மூன்று முறை வென்றுள்ளது. அடுத்த உலகக் கோப்பை ஜேர்மனியில் தான் நடைபெற இருக்கிறது.

❖ கார்ல் மார்க்ஸ், JW கொத்தே, சீகன் பொல்க், பிஸ்மார்க் போன்ற உலகப்புகழ் பெற்ற அறிஞர்களும் தலைவர்களும் ஜேர்மனியில் தோன்றினர்.

*

# பாதாள ஆறுகள்

ஆறுகள் பூமியின் மேற்பரப்பில் ஓடுவதாகவே நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். பாதாளத்தில் ஓடும் ஆறுகள் சுண்ணாம்புப் பாறைகளை ஊடுவிச் செல்கின்றன. பூமியில் சிறு ஓடைகளாக அவை தோன்றி பூமிக்குள் மறைகின்றன. பின்னர் பல கிலோமீற்றர்களுக்கு அப்பால் மீண்டும் பூமியின் மேற்பகுதியில் தோன்றி, சாதாரண ஆறுகளாக ஓடிச் செல்கின்றன. இத்தகைய பாதாள ஆறுகளை இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளன. தமிழகத்திலும் பாலாற்றுக்குக் கீழே வற்றாத ஒரு பாதாள ஆறு ஓடிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# எடிசனின் வாழ்வில்



பிரபல விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் மிகப் பிரியமாகப் பூனை ஒன்றை வளர்த்து வந்தார். அது நிறையக் குட்டிகள் போட்டது. ஒரே ஒரு குட்டி தவிர மற்றவைகளை நண்பர்களுக்குக் கொடுத்துவிட்டார்.

அந்தப் பூனை தனது ஒரே குட்டியோடு வீட்டுக்குள் வலம் வந்துகொண்டிருந்தது. இரவு நேரங்களில் எடிசன் தனது அறைக் கதவை அடைத்து வைப்பார். இதைப் பிடிக்காத பூனை படாதபாடுபடுத்தியது. கதவில் ஓட்டை போட்டு வைத்தால் இப்படி தொந்தரவு செய்யாது என்று எண்ணிய எடிசன் தச்சரை வரவழைத்து கதவில் ஒரு பெரிய ஓட்டை தாய்ப் பூனைக்கும், சிறிய ஓட்டை குட்டிப் பூனைக்கும் ஆக இரண்டு ஓட்டைகள் போடும்படி உத்தரவிட்டுவிட்டு வெளியே சென்றார். அவர் வீட்டுக்குத் திரும்பியபோது அதிர்ச்சியடைந்த எடிசன் எரிச்சலுற்றார்.

ஏனெனில், கதவில் ஒரே ஒரு பெரிய ஓட்டை மட்டுமே போடப் பட்டிருந்தது. குட்டிப் பூனைக்கான சிறிய ஓட்டையைக் காணவில்லை. தச்சனைப் பார்த்து கோபமாகக் கத்தினார். சொன்னபடி ஏன் செய்யவில்லையென்று.

தச்சனுக்கோ சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டு, பெரிய ஓட்டை வழியாகவே குட்டிப் பூனையும் தாராளமாகப் போக முடியுமே எனும் உண்மையை எடுத்துரைத்தார்.

அப்போதுதான் புரிந்ததாம் எடிசனுக்குத் தனது தவறு. தச்சனின் புத்திசாலித்தனத்தை அவர் வாயாரப் பாராட்டினார்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்
## விண்ணப்பம்

முழுப் பெயர் :..................................

கற்கும் பாடசாலை :..................................

கற்கும் தரம் :..................................

வீட்டு முகவரி :..................................

பிறந்த திகதி :..................................

ஆர்வமுள்ள துறைகள் :..................................

:..................................

...............
திகதி

..............................
ஒப்பம்

..........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம்

..........................
பெற்றோர் ஒப்பம்

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



*முழுப்பெயர்:-*
நடராசா சாகினி
*கற்கும் பாடசாலை :-*
யா/ இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.
*கற்கும் தரம் :-* 9
*ஆர்வமுள்ள துறைகள் :-*
ஆங்கிலக் கட்டுரைகள் எழுதுதல், பத்திரிகை வாசித்தல்

*முழுப்பெயர்:-*
துஷான் மிலன்
*கற்கும் பாடசாலை :-*
யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்
*கற்கும் தரம் :-* 9
*ஆர்வமுள்ள துறைகள் :-*
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.





*முழுப்பெயர்:-*
தர்மரத்தினம் சுஜீவன்
*கற்கும் பாடசாலை :-*
யா/ இந்து ஆரம்ப பாடசாலை.
*கற்கும் தரம் :-* 5
*ஆர்வமுள்ள துறைகள் :-*
கல்வித்துறை,
விளையாட்டுத்துறை.

*முழுப்பெயர்:-*
இளங்குமரன் ஹரிசாந்
*கற்கும் பாடசாலை :-*
யா/ இந்து ஆரம்ப பாடசாலை.
*கற்கும் தரம் :-* 1
*ஆர்வமுள்ள துறைகள் :-*
விளையாட்டு,
ரீ.வி பார்த்தல்.



*முழுப்பெயர்:-*
ம.றொபின்றாச்
*கற்கும் பாடசாலை :-*
யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
*கற்கும் தரம் :-* 9
*ஆர்வமுள்ள துறைகள் :-*
விளையாட்டு, வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

*முழுப்பெயர்:-*
இ.கௌரிநிஷா
*கற்கும் பாடசாலை :-*
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
*கற்கும் தரம் :-* 10
*ஆர்வமுள்ள துறைகள் :-*
சித்திரம் வரைதல்,
புத்தகம் வாசித்தல்.

*முழுப்பெயர்:-*
ரகுபதி நிஜங்கன்
*கற்கும் பாடசாலை :-*
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
*கற்கும் தரம் :-* 9
*ஆர்வமுள்ள துறைகள் :-*
சித்திரம், கதைகள்.

*முழுப்பெயர்:-*
பத்மநாதன் கண்ணதாசன்
*கற்கும் பாடசாலை :-*
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.
*கற்கும் தரம் :-* 8
*ஆர்வமுள்ள துறைகள் :-*
கல்விசார் செயற்பாடுகள், நாடகம்,
பாட்டுப் படித்தல்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

- திருக்குறள்-

# நமது நோக்கு

## அவலம் வேண்டும் அவசரம்!

அடிக்கடி இந்தியாவுக்கான பயணங்களை மேற்கொண்டுவரும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் - புதுடெல்கியில் வைத்துத் தெரிவித்த கருத்தொன்றும், கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்ட அறிவிப்பும் - அவர்களது அவசரக் குடுக்கைத்தனத்தை வெளிக்காட்டியிருப்பதுடன்- எப்பாடுபட்டாவது அமைதிப் பேச்சுக்கள் நகரமுடியாத கட்டத்திற்குள் சிக்கிவிட வேண்டுமென்ற ஆர்வத்தையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இப்போதே அரசியற் பிரச்சினைகளைப் பேசிவிட வேண்டுமென்றும், தீர்வுகளைக் கண்டுவிட வேண்டுமென்றும் இவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

'குதிரையும் வண்டியும் கதையில் - இப்போது வண்டியே முன்செல்கிறது. நாங்கள் குதிரைதான் முன்செல்ல வேண்டுமென விரும்புகிறோம்' எனக் கூறும் லக்ஷ்மன் கதிர்காமர் -

பல வருடங்கள் சென்றுவிட்டன. இனி கலந்தாலோசிப்பதற்கு எதுவுமில்லை. ஏற்றுக் கொள்ளக்கூடிய சகல தீர்வுகளும் மேசையில் கிடக்கின்றன. அதை விரைவாக எடுக்காமலிருப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவோ - சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து ஒரு வருட காலம் பூர்த்தியான போதிலும், அரசியல் தீர்வு தொடர்பாக உறுதியான முடிவுகள் எட்டப்படாதது குறித்து விசனமடைந்திருக்கிறார்.

இவர்களது நோக்கமெல்லாம் - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உடனடி உதவிகளை விட, மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய இயல்பு நிலையைவிட - அரசியல் தீர்வொன்றைப் பெற்றுவிடுவதே முதன்மையானது என்னும் நோக்கில் - படிப்படியாக, உறுதியாக நகரும் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பக்கட்டத்திலேயே சிதைத்துவிடும் சூழ்ச்சியேயன்றி வேறல்ல.

போரின் பாதிப்புக்களிலிருந்து மக்கள் மீண்டு, சமாதானத்தின் பயன்கள் மக்களை எட்டும்போதே - அவர்கள் தற்போது தோன்றியுள்ள அமைதிச் சூழலையும், பேச்சுக்களையும் நம்பிக்கையோடு எதிர்நோக்குவார்கள் என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாயிருக்கும் நிலையில் -

அதற்கேற்ப அரசாங்கமும் ஒரு இணக்கப்பாட்டினூடு நகர்ந்துவரும் சூழலில், 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் செயற்பட வேண்டுமென்று சந்திரிகாவும், கதிர்காமரும் விரும்புவது - நல்ல நோக்கத்திற்கானது என்று எவருமே கூறமாட்டார்கள்.

கதிர்காமரது உவமானத்தின்படியே கூறுவதானால்- குதிரையும் வண்டியும் முன்னே செல்வதற்கு தகுந்த சீரான பாதை அவசியம். அந்தப் பாதையாகவே, மக்களுக்கான உடனடி, மனிதாபிமான - புனர்வாழ்வுப் பணிகள் காத்திருக்கின்றன என்பதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் வெற்றியடைய வேண்டும். இத்தீவில் நிரந்தரமான அமைதியும் சமாதானமும் உருவாக வேண்டுமென்று விரும்புபவர் எவருமே - 'அவசரப்படக்கூடாது, நிதானம் தேவை' என பதில் ஒத்த கருத்துடையவர்களாகவே இருக்கின்றனர்.

சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கான புறச்சூழல் - மக்களது சுமுகவாழ்வும், புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளும், சுதந்திரமான அசைவும் உருவாக்கப்படுவதே முதற்தேவை என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் மிக ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றார்.

அண்மையில் நடைபெற்ற தாய்லாந்துப் பேச்சுக்களின் போதுகூட - பேச்சுக்களில் கலந்து கொள்ளச் சென்ற புலிகளின் பிரதிநிதிகளுக்கு இது விடயமாக அவர் தெளிவான பணிப்பையும் வழங்கியிருந்தார்.

அதேவேளை - மத்தியஸ்தம் வகிக்கும் நோர்வேயும், ஏனைய உதவி வழங்கும் நாடுகளும் கூட - அமைதியை உருவாக்குவதில் முதற்பணியாக புனரமைப்பும், புனர்வாழ்வும் அமைய வேண்டுமென்பதையே வலியுறுத்தியும் வருகின்றன.

இத்தகைய சூழலில் - மக்களின் இயல்பு வாழ்வு பற்றி முக்கியத்துவமளிக்கப்படும்போது - அத்தகைய அமைதி நிலை உருவாகுவதற்கான புறச்சூழல்களில் மிக முக்கியமான மீள்குடியமர்வுக்குத் தடைக்கல்லாக இருந்துவரும் பாதுகாப்பு வலயங்களைத் தளர்த்துவதிலேயே முரண்டு பிடிக்கும் கருத்துக்களை வெளியிடும் ஜனாதிபதி சந்திரிகாவும், லக்ஷ்மன் கதிர்காமரும் - 'எல்லாம் முடிந்தது, இனி என்ன...?' என்ற ரீதியில் பேசுவது - முற்று முழுதான குழப்பவாதமே தவிர வேறல்ல.

1995 இல் எவ்வாறு, அன்று நடந்த பேச்சுக்களைத் திசைமாற்றிக் குழப்பியடித்தனரோ - அதே பாதையில் வருமாறு, இவர்கள் இன்று வலியுறுத்துவது - மீண்டுமொரு யுத்தத்தை வலிந்திழுக்கும் கீழ்த்தரமான செயலென்றே உறுதியாகச் சொல்லலாம்.

# வட-கிழக்கில் திட்டத் தெரிவுக்கான சிறானின் வழிகாட்டும் நெறிகள்!

**வட- கிழக்கு உடனடி புனர்வாழ்வு, புனரமைப்பு மனிதாபிமான பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை சிறான் வரைந்துள்ளது. சர்வதேச ரீதியில் பெறப்படும் நிதியை இப் பணிகளுக்கு பயன்படுத்துவது குறித்து சிறான் வரைந்துள்ள விரைவுத் திட்ட வரைபு இது •**

*அறிமுகம்*

வட-கிழக்கு மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான விரைவுத் திட்டவரைவுகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் மூலம் வட-கிழக்குப் புனரமைப்பு நிதியினைப் பயன்படுத்துவதற்கான செயல்முறைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள் மூலம் வடக்கு-கிழக்கில் நிலவும் சமாதானச் சூழ்நிலையை மேலும் வலுப்படுத்தவும் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தவும் வழிசெய்யப்படும்.

திட்டங்களுக்கூடாக புனர்வாழ்வுக்கான "இலக்குக் குழுக்கள்" தெரிவு செய்யப்பட்டு, மக்களின் அவசரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

I *முன்னுரிமைகள்*

1. குறிப்பிட்ட பகுதி மக்களின் தேவைகளைத் தேவை மதிப்பீட்டுக்குழு சேகரித்து மாவட்ட இணைப்பாளரிடம் கையளிப்பர்.
2. திட்டங்களில் உறுதியான பயனாளிகளின் பங்களிப்பு அவசியம் என வலியுறுத்தப்படுகின்றது.
3. உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது சமூகம்சார்ந்த நிறுவனங்களின் பங்களிப்பிற்குத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

II *சிறானினால் அடையாளங் காணப்பட்ட திட்டங்கள் அமுலாக்கப்படவேண்டிய பகுதிகள்*

2002 நவம்பர் மாதம் 25ஆம் திகதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கூட்டாக விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் வெளியிட்ட வேண்டுகோளிற்கு இணங்க, புனரமைப்புத்திட்டங்களுக்குரிய பகுதிகள் அடையாளங் காணப்படும். இதன்படி,

1. வட-கிழக்கிற்கு வெளியே இடம் பெயர்ந்து வாழும் மக்களின் மீள்குடியேற்றம், கண்ணிவெடிகள் அகற்றுதல் உட்பட உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம்
2. அவர்களது வாழ்க்கையை மீள ஆரம்பிப்பதற்கான பண உதவிகள் அல்லது வாழ்நிலைக்குத் தேவையான உதவிகள்.
3. வீடுகளைப் புனரமைப்பதற்கான இலகு கடன்கள் திட்டங்கள்.
4. குடிநீர் விநியோகத்திற்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகள்
5. மீளக்குடியேறும் இடங்களுக்கான வீதிப் புனரமைப்பு
6. மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள்

***பெண்களது நிலையை முன்னேற்றுதல் மற்றும் பால்நிலை சமத்துவத்தினைப் பேணுவதற்கான நடவடிக்கைகள்.***

1. தாய்மார்களின் ஊட்டச் சத்துப்பேணல் மற்றும் சுகாதாரத் தேவைகள் தொடர்பான திட்டங்கள்.
2. வீட்டுத் தலைவர்களாக இருக்கும் பெண்கள் மற்றும் விதவைகளுக்குத் தேவையான கல்வியறிவு, தொழிற்பயிற்சிகள், கடன்வசதிகள், வேலைவாய்ப்புக்களை வழங்குதல்.
3. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான விசேட கவனம் அளித்து முன்னெடுக்கப்படும் திட்டங்கள்.

***வட-கிழக்கில் சிறுவர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகள்.***

1. அனாதைச் சிறுவர்களுக்கு ஆதரவளித்தல்.
2. ஆதரவற்ற சிறார்களது இல்லங்களுக்கு உதவியளித்தல்.
3. சமூகப் பாதிப்புக்களில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்.
4. குறை ஊட்டம், மனவடு, மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் பாதுகாப்பளித்தல்.
5. இடைநடுவே பாடசாலையை விட்டு விலகும் சிறார்கள் கல்வியைத் தொடர்வதற்கான வசதி மற்றும் சிறார்களுக்கான கல்வி வசதிகளை உறுதிப்படுத்தல்.

***யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தனியாட்களுக்கான வேலை வாய்ப்பு மற்றும் வருவாய்க்கான வாய்ப்புக்களை அளித்தல்.***

1. கடன் திட்டங்கள், மீள் சுற்று நிதியுதவி, மற்றும் வருவாய்க்கான காப்பீட்டு உதவிகளை வழங்கும் நுண்நிதித் திட்டங்கள்.
2. வேலை வாய்ப்பை வழங்கக் கூடிய வீதித்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர்வழங்கல் போன்ற அவசியமான கட்டமைப்புத் திருத்தங்கள்.
3. உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் நுண் பொருளாதார நடவடிக்கைகளுக்கான சேவைகளை வழங்குதல்.
4. சந்தை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான போக்குவரத்து வசதிகளை அதிகரித்தல்.

***புனர்வாழ்வுக்கான ஏனைய பகுதிகள்***

1. அடிப்படைக்கல்வி, முறைசாரக் கல்வி, தொழில்நுட்ப பயிற்சி என்பவற்றை மேம்படுத்த எடுக்கவுள்ள நடவடிக்கைகள்
2. அடிப்படைச் சுகாதாரத்தினையும் சித்த வைத்தியம் உட்பட முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் வழங்குதல்.
3. சமூகங்களுக்கு இடையே ஒப்புரவினை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள்.

III. *முன்வரைபுகளின் தரம்*

பயனீட்டாளர்களுக்கு உடனடியான நன்மைகளை விளைவிக்கக் கூடிய திட்டங்களுக்கான முன்னுரிமை.

இந்த வகையில்,

1. தெளிவாக வரையறுக்கப்பட்ட போதுமான கண்காணிப்புடைய இலக்குகளும் அதை அடைவதும்.
2. திட்டங்களின் நிலையான தன்மை.
3. பால்நிலை சமத்துவத்தினை உறுதிப்படுத்துதல்.
4. மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.
5. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
6. அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது கருத்தில் எடுக்கப்பட வேண்டிய ஏனைய விடயங்கள்.

இவற்றின் அடிப்படையில் திட்டங்களின் தரம் கணிப்பிடப்படும்.

***கால அளவு***

1. தெரிவு செய்யப்படும் திட்டங்கள் மிகக்குறுகிய கால எல்லைக்குள் பயன்களைத் தரக்கூடியதாக இருக்க வேண்டும். (பொதுவாக 12 மாதங்கள்)
2. திட்டங்கள் எல்லாம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படக் கூடியதாகவும் கண்காணிக்கத்தக்கதாகவும் மதிப்பிடக் கூடியதாகவும் அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் தெளிவான முடிவுகளைத் தரக்கூடியதாகவும் அமைய வேண்டும்.

***திட்டங்களைச் சமர்ப்பிப்பதற்கும் தெரிவு செய்வதற்குமான முறைமைகள்.***

இனங்காணுதல், திட்டமிடுதல், திட்டங்களை நடைமுறைப் படுத்துதுல் ஆகியவற்றுக்கு நான்கு முறைமைகளை சிறான் கூறுகிறது.

இந்த முறைமைகளானது- திட்டங்களை இனங்காணும் பயனீட்டாளர்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்துவதாகவும், தெளிவான பொறுப்புவாய்ந்த உயர் தரத்தை வழங்கக் கூடியதாகவும் இருக்கும்.

பொதுவாக இரண்டு முறையிலான திட்ட அமுல்படுத்தல் வழிமுறைகள் உள்ளன. ஒன்று - புனர்வாழ்வுக்கான உபகுழு திட்டமுன் வரைபை உருவாக்குவது. மற்றையது - திட்டத்தினை அமுல்படுத்தும முகவரகங்கள் திட்ட முன்வரைபுகளை உருவாக்குவதாக அவை அமையும்.

# கிழக்கில் காணாமற்போனோர் விசாரணைகள் ஆரம்பமாகின!

கிழக்கு மாகாணத்தில் காணாமற்போனோர்கள் பற்றிய முறைப்பாடுகள் இனி ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், நேற்று முன்தினம் முதல் விசாரணைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதாகவும் -மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிறி குணதிலக - திருகோணமலையில் இதற்கான ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் காணாமற்போனோர் பற்றி மக்களிடையே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களோ, விசாரணைகளைக் கோரும் செயற்பாடுகளோ - யாழ்ப்பாணத்தைப்போல நடைபெறாதது பற்றியும் அவர் அப்போது குறிப்பிட்டார்.

திருகோணமலையில் - இடம்பெயர்ந்து மீளக்குடியமர்வது பற்றிய பிரச்சினைகள் முக்கியமானவை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை-யுத்தநிறுத்தம் அமுலாகியதன் பின்னர்-பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் எவரும் கைது செய்யப்பட்டதாகவோ அல்லது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாகவோ வட - கிழக்குப் பகுதியிலிருந்து தமக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

# யாழ்.சிறைச்சாலையில் பணியாற்றும் 19 சிறைக்காவலர் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் கடமை புரிந்த சிறைக்காவலர்கள் பத்தொன்பது பேர் திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பொ.ஐ.மு ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட பத்தொன்பது சிறைக்காவலர்களே இப்போது இடைநிறுத்தப்பட்டுள்ளனர். இப பத்தொன்பது சிறைக்காவலர்களும் கடந்த காலங்களில் எவரும் இப்பணிக்கு முன்வராத நிலையிலும், கடந்த பதினைந்து மாதங்களாக நிரந்தரநியமனம் கிடைக்காதபோதிலும் இவர்கள் பணியில் ஈடுபட்டனர். இப்போது ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்தவர்கள் தமது ஆதரவாளர்களை இப் பணிக்கு நியமித்துள்ளதாலே இப் பத்தொன்பது சிறைக் காவலர்களும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகச் சிறைக்காவலர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இடைநிறுத்தப்பட்டுள்ள இப் பத்தொன்பது சிறைக்காவலர்களையும் அடுத்த மாதம் 3 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் இந் நேர்முகப்பரீட்சையில் சித்தியடைபவர்கள் ஒப்பந்த அடிப் படையில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன .

(லி)

# தென்னாசியாவில் வலுமிக்க சக்தி யார்? போட்டியில் களமிறங்கும் இந்தியாவும் சீனாவும்!



வாஜ்பாய்

சர்வதேச விவகாரத்தில் அமெரிக்க - ஈராக் முறுகல் தொடர்ந்தும் நிலவியபோதும் மாற்றமின்றிய போக்கு நீடிக்கின்றது. "பழைய கழுதையின் புதிய திருமணம்" என்பது போல் உலக நாடுகளும் மக்களும் எதிர்ப்பு அலையில் ஈடுபட, அமெரிக்கரும் போரை தொடங்குவதற்கு தயாராவதுபோல் நிலைமை காணப்படுகின்றது. ஆனால், இவ்வாரம் தென்னாசியப் பிராந்தியத்தினை மையப்படுத்திய அரசியல் நிகழ்வுகள் பிராந்தியத்திலும், சர்வதேசத்திலும் சூடு பிடித்துள்ளன. உள்நாட்டு அரசியல் நெருக்கடிகளுக்கு முழுக்குப் போட்டு விட்டு இந்தியாவும் பாகிஸ்தானும் வழமைபோல் ஒரு பனிப்போரை நடாத்துகின்றதுபோல் - இந்தியா சீனாவுடன், புதிய ஆனால், தந்திரோபாயமான நகர்வுகளுக்குத் தயாராகும் நிலையும் காணப்படுகின்றது. எனவே, இந்தியாவை மையப்படுத்திய அரசியல் போக்கை இவ்வாரம் நோக்குவோம்.

இந்தியாவின் பிரதமர் அந்தமான்-நிக்கோபார் தீவுகளுக்கு விஜயம் செய்த ஒரு சம்பவத்தை முடிந்த வாரத்தின் ஆரம்ப நாட்களில் அவதானிக்க முடிந்தது. பிரதமர் வாஜ்பாயின் விஜயத்திற்கு முதல்நாள், அந்தமான் பிராந்தியத்தின் உல்லாசப் பயணத் துறையின் முக்கியம் பற்றியும் அதன் அவசியம் பற்றியும் பரபரப்பாக டெலகி அரசால் பேசப்பட்டது. திடீரென பிரதமர் அந்தமானுக்குச் சென்றதும் அங்குள்ள பிரதேசங்களைப் பார்வையிட்டதும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். ஏன் இந்தியா அவசரமாகவும் திடீரெனவும் அந்தமான் தீவுகளை நோக்கித் திசை திரும்பியுள்ளது என்பது முக்கியமான கேள்வியாகும். அந்தமான்-இந்தியாவின் செல்வாக்குப் பிரதேசம் என்பது கேள்விக்கிடமின்றி கடந்த காலத்தில் நிரூபணமாகியுள்ளது. ஆனால், அது தற்போது இந்தியாவின் செல்வாக்கை இழந்துள்ளதுடன், சீனர்களின் அதிக கவனத்தைப் பெற்றுள்ளது என்பதே அப்பிரதேசம் பொறுத்த தற்போதைய இந்திய ஆட்சியாளரின் அக்கறைக்கு காரணமாகும்.

சீனா, அந்தமான்-நிக்கோபார் பிரதேசத்தை நோக்கி 2000 ஆம் ஆண்டுக்கும் பின்னர் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டனர். குறிப்பாக, Zadatkyi, Sittwe ஆகிய தீவுகளில், சீனா கடற்படைத் தளங்களை நிறுவியுள்ளதுடன், பாரிய நீர்மூழ்கிக் கப்பல்களையும் விமானந்தாங்கிக் கப்பல்களையும் எதிர் காலத்தில் இப்பிரதேசத்தை மையப்படுத்தி இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நிறுவத் திட்டமிட்டுள்ளது. மியான்மாரின் கரையோரப் பிரதேசங்களில் சீனா கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதுடன், மியான்மாரின் கரையோர இறங்குதுறையாக விளங்கும் Mergui பகுதியை மையப்படுத்தி இராணுவ-கடற்படை விஸ்தரிப்பினை மேற்கொண்டுவருகின்றது. மேலும்- இந்து சமுத்திரப் பிரதேசத்தையும் சீனாவின் தென்சீனக் கடற்பகுதியையும் தொடுக்கும் Straits of Malacca நீரோடை சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் உட்பட்ட பகுதியாக உள்ளது. இதனால் சீனாவின் கடற்படைக் கட்டமைப்பு வளர்வது மட்டுமன்றி, அதன் வர்த்தக நோக்கிலான கப்பல் துறையின் வளர்ச்சியும் வாணிபத்தின் புதிய போக்குவரத்து விருத்தியும் அதிக முக்கியத்துவத்தை வகிக்கும் நிலையை அடைந்துள்ளன. அந்தமான் கடற்பகுதியை அண்டிய சீனாவின் வளர்ச்சி அதன் ஆழ்கடல் நோக்கிய (Blue water) நகர்வை வெற்றிகரமானதாக மாற்றுமென இந்தியப் பாதுகாப்பு ஆய்வாளரான கலாநிதி Harvir sharma இந்திய ஆட்சியாளர்களை 2001 இறுதிக் காலப்பகுதியில் எச்சரித்திருந்தார். அவர் மேலும் குறிப்பிடும்போது, சீனா 2020 களில் திட்டமிட்டிருக்கும் கடலாதிக்க அணுகுமுறையானது அதனை உலகத்தில் மூன்றாவது கடற்படை திறனுடைய அரசாக மாற்றுமெனக் குறிப்பிட்டிருந்தார். அதாவது- அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்தநிலையை சீனா அடையுமென அவர் கூறுகின்றார்.

சீனாவின் நகர்வை ஓராண்டுக்கு முன்பே எச்சரிக்கப்பட்ட நிலையில் இந்தியர்கள் இப்போதுதான் விழித்தெழுந்துள்ளார்கள் போல் விளங்குகிறது. ஆனால், சீனா இந்தியாவின் கொல்லைப்புறம்வரை நகரத்தொடங்கிவிட்டது. இந்தியாவின் இன்னோர் செல்வாக்கு மிக்க தீவான மாலை தீவுப் பிரதேசத்திலும் சீனாவின் கடற்படைத்தளம் பாரிய முயற்சியுடன் விருத்தி பெற்றுவருகின்றதென்பது அது அதிகார விஸ்தரிப்புக்கும் வழி வகுக்கும் காரணியாக அமையும் வாய்ப்பு அதிகமுண்டு. ஆனால், அது இந்தியாவையோ அல்லது வேறு நாடுகளையோ இலக்கு வைத்து எல்லா முழு உலகத்திலும் அதன் அதிகாரத்தைத் தக்கவைக்கும் நிலையை ஏற்படுத்தலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, வாஜ்பாயின் அந்தமான் விஜயத்தின் பின்னால் மறைந்திருந்த உண்மை இதுவாகவே உள்ளது. அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கை மட்டுமல்லாது குறுந்தூர ஏவுகணைகள் இரண்டினை இந்தியா ஒரே வாரத்தில் பரிசோதித்து வெற்றி கண்டது. அவை எல்லாம் எச்சரிக்கை கலந்த தோரணையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளாகவே அமைந்துள்ளது எனலாம். ஆனால் இந்தியாவுக்கு எப்போதும் உள்ள பிரச்சினையாகச் சீனா இல்லாதபோதும், சீனாவின் மாற்றமும் வளர்ச்சியும் இந்தியாவுக்கு ஆபத்தானதாகவே அமையும் சூழல் உண்டு. இதனை விளங்கிக் கொள்ள பின்வரும் விடயத்தை நோக்குவோம்.

1962 இல் இரு நாடுகளுக்கும் இடையில் போர் வெடித்தபோது, சீனர்கள் இலங்கையின் நிலப்பரப்புக்கு ஒப்பான நிலப்பரப்பை இந்தியர்களின் பிரதேசத்தில் கைப்பற்றி

வலிமை மிக்க சீனா



இங்கு நினைவுகூரத்தக்கது. மாலை தீவின் தென்பகுதியில் அமைந்துள்ள Marao தீவில் ராடர் நிலையமொன்றைக் கட்டிவரும் சீனா-தனது கடற்படையை அங்கு நிறுவி வருகின்றது. அத்தீவு ஏறக்குறைய இந்துசமுத்திரத்தின் மையப்பகுதி என்பது கவனத்திற்குரியது. எனவே, இந்தியர்களின் கொல்லைப்புறமும் சீனாவின் செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது. இந்தியா பாரிய பாதுகாப்புப் பிரச்சினையை உணரவேண்டிய நிலைக்குள் அகப்பட்டுள்ளது. இதனை விளங்கிக் கொண்ட நிலையில்தான், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் ரஷ்யாவுக்கு அண்மையில் விஜயம் செய்தபோது, ரஷ்யாவுடன் 'அட்மிரல் கோக்ஸ் கொவ்' என்ற பாரிய கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்யும் உடன்பாட்டில் கையெழுத்திட்டதும், நீர்மூழ்கிக் கப்பல்கள் பலவற்றை ரஷ்யாவிடம் கொள்வனவு செய்ய முடிவெடுத்துள்ளமைக்குமான காரணமாகுமெனக் கூறலாம் போலுள்ளது. இருந்தபோதும், காலம் கடந்த நடவடிக்கையாகவே அவை அமையப் போகின்றநிலையே இப்பிராந்தியத்தில் உள்ளது.

சீனாவின் பொருளாதாரப் போட்டி ஆழ்கடல் அதிகாரத்தை (Blue water sea power) தக்கவைப்பதன் ஊடாக சாத்தியப்படும் என்பதுடன், னர். ஆனால் பாகிஸ்தானியரை இந்தியா பல தடவை தோற்கடித்ததுடன், பாகிஸ்தான் பலமான அரசாக ஆகுவதில், அந்நாடு எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாவற்றையும் தோற்கடித்துவிட்டது. எனவே, ஒப்பீட்டில் இந்தியா, பாகிஸ்தானை மிஞ்சிய அரசு மட்டுமே அன்றி- சீனாவுக்கு சவாலான, வெற்றிபெறும் சவாலான அரசு என்று கூறிவிட முடியாது. இது இந்திய - சீனா முறுகல் தணிவுக்கும் அமைதியான அணுகுமுறைக்கும் காரணமான நிலைமையே சாட்சியாக அமையும்.

அதாவது, சீனாவின் பலத்தினால இந்தியா அமைதியை விரும்புகின்ற அரசாக விளங்குகிறது எனக்கூறலாம். எனவே, வாஜ்பாய் என்னதான் தலைகீழான முயற்சிகளை எடுத்தாலும் சீனாவை இந்து சமுத்திரப் பிரதேசத்திலிருந்து அகற்றுவது கடினம். அதுவும் வங்காளவிரிகுடாப் பகுதி மற்றும் அந்தமான் தீவுகளை அண்டிய பகுதியிலிருந்து அப்புறப்படுத்துவது சாத்தியப்பாடான நடவடிக்கையாக அமைவது கடினம். மியான்மார் சீனாவின் மிகப்பலமான நட்பு நாடு. ஒருவகையில் சீனாவின் பொம்மையாகக்கூட மியான்மார் இராணுவ ஆட்சி அமைந்துள்ளதெனக் கூறுவதும் பொருத்தப்பாடாக அமையும். இந்தியர்கள் குழப்பமடையும் இச்சந்தர்ப்பத்தில், இந்தியாவுக்கு மியான்மாரின் அமைச்சர் ஒருவர் விஜயம் மேற்கொண்டுள்ளார். அதன் பின்னணி எதுவாக அமைந்திருக்கும் என்பதை இலகுவாக விளங்கிக் கொள்ளமுடியும். மியான்மாரின் இராணுவ ஆட்சியை அகற்ற முடியாத நிலையும், சீனாவின் செல்வாக்கும் ஒரே நோக்கிலான அரசியல் பரிமாணங்களின் இசைவு என்றே கூற முடியும்.

சீனா மியான்மாருடன் மட்டுமல்ல பாகிஸ்தானுடனும் நெருக்கமுடைய அரசு என்பதனை விளங்கிக்கொள்ளுதல் அவசியம். இந்தியாவின் கடந்த ஐம்பதாண்டு அரசியல் சர்ச்சைகளிலும் பாகிஸ்தான் பிரதான அரசு என்பது கவனத்துக்குரியது. பாகிஸ்தானுடன் பல யுத்தத்தினைக் கடந்தகாலத்தில் மேற்கொணடது மட்டுமல்ல, தற்போதும்கூட மதத்தின் பிரிவுகளால் ஏற்பட்ட மோதல் தொடர்ந்த வண்ணமுள்ளது. அத்தகைய குழப்பத்துக்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் இந்தியா சிக்கித்தவிக்கும்போது, சீனா மிக மெதுவாக ஆனால் உறுதியாகப் பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்பத்தில் வளர்ந்து கொண்டே செல்கின்ற நாடாக விளங்கியது. இந்தியர்கள் அரசியல் முரண்பாடுகளாலும், ஆபத்துமிக்க பாராளுமன்ற ஜனநாயகத்தாலும் தமக்குள்ளே போராடும்போது, சீனர்கள் ஒரே கட்சி ஆதிக்கத்தினூடாக வெற்றிகரமான அரசியல் மாற்றங்களைச் சாதித்து வந்தார்கள். உள்நாட்டு உறுதிப்பாடும் பலமும் சர்வதேச மட்டத்தில் முன்னோக்கிய நகர்விற்குக் காரணமாக மாறியது. சீனர்களின் அனுபவம் வித்தியாசமானது. அதனை இந்தியர்கள் கடைப்பிடிப்பது கடினம். சிறந்த எடுத்துக்காட்டு- இருநாடுகளதும் ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றி தோல்விகளின் அளவீடுகளைக் கொண்டு மதிப்பீடு செய்ய முடியும். இந்தியர்கள் பலதடவை ஐந்தாண்டுத் திட்டமிடல்களைக் கைவிட்டதுடன், தோல்விகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக விளங்கும்போது சீனர்கள் வெற்றிகரமான திட்டமிடல்களை உருவாக்கி வந்தனர்.

இந்தியா - பாகிஸ்தானிய முறுகல் வழமையான விடயமாக அமைந்தபோதும் தற்போதைய சம்பவம் சற்று விதியாசமானது. ஈராக் விவகாரத்தில் அமெரிக்காவின் போக்கை விமர்சிக்கும் வாஜ்பாய் அரசுக்கும், ஈராக்குக்கு அடுத்த இலக்கு பாகிஸ்தான் எனக் கூறும் முஷாரப் அரசுக்கும் இடையிலான முறுகல் சர்வதேச அரசியலுடன் இணைந்துள்ள அரசிய்யல் எனலாம். ஏனெனில், ஈராக்கை ஆதரிக்காது விட்டாலும் அமெரிக்க எதிர்ப்பைக் காட்டும் இந்தியாவின் பிரதான நோக்கம்- பாகிஸ்தான் பயங்கரவாத அரசு என்பதாகும். அதனால், பயங்கரவாதப் பட்டியலில் பாகிஸ்தானை உலக நாடுகள் ஏற்கவேண்டும் என்பது மட்டும் இந்தியாவின் தந்திரமாக உள்ளது. அதனூடாக உலகம் கூறும் பயங்கரவாதமாக பாகிஸ்தானை இந்தியா அணுக முயலுகின்றது. உலகம் பயங்கரவாதத்தை ஒடுக்க முயலும்போது, அதில் இந்தியாவுக்கும் பங்கு உண்டு எனக் கோரும் இந்தியா, பாகிஸ்தான் மீது மீண்டும் போர்தொடுக்க விரும்புகின்றதனைக் காட்டுவதாக உள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் சூழல் அதிகரிக்க அதிகரிக்க இந்தியா ஆட்சியாளர்களின் பாகிஸ்தான் மீதான நடவடிக்கை அதிகரிக்கின்றது. தூதரக ஊழியர்களையும், அதிகாரிகளையும் அகற்றும் நடவடிக்கையைத் தொடங்கிய அரசு இந்தியா என்றவகையில்- அதன் தயார்ப்படுத்தலிலும், நடவடிக்கையிலும் தீவிரம் காட்டும் அரசாக இந்தியா விளங்குகிறது எனலாம்.

இதே அணுகுமுறையை இந்தியா, ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கப் போர்க்காலப் பகுதியிலும் கடைப்பிடித்தது. ஆனால் அதில் தோற்றுப்போனது. இதிலும் இந்தியா எத்தகைய நிலையை அடையாலாம் என்பதை தீர்மானிக்கும் அரசாக அமெரிக்காவும், சீனாவும் விளங்குவன என்ற அடிப்படையில் அதனைப் புரிந்துகொள்ளலாம்.



எல்.கே.அத்வானி

ஆப்கானிஸ்தானைவிட இப்போர் தீவிரமானதாக அமையலாமெனப் பலர் கருதும்போது, அமெரிக்காவை விட சீனர்கள் தீர்மான சக்தியாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தளவுக்கும் சீனா - பாகிஸ்தான் நெருக்கம் காணப்படுகின்றது.

இந்தியா - ஈராக் போரை கருத்திற்கொண்டு, பாகிஸ்தானில் மட்டுமல்ல- இப்பிராந்தியத்திலேயே சில மாறுதல்களை ஏற்படுத்தலாமென கருதுகின்றது. இந்தியாவின் கடந்த கால நடவடிக்கைகள் இப்பிராந்திய நாடுகளிடமும், மக்களிடமும் இல்லாமலில்லை. ஆனால், இந்தியா நினைக்குமளவுக்கோ - அல்லது இப்பிராந்திய அரசுகளும், இம்மக்களும் கருதும் அளவுக்கோ இந்தியாவின் பலம் மெச்சக்கூடியளவுக்கு இல்லாது போய் விட்டது.

இந்தியா தனது நிலையையும், உறுதிப்பாட்டையும் தக்கவைப்பதற்கு முயல்வதே பெரும் நெருக்கடியாக அமையும்போது, அதனால் பிராந்தியத்தில் அபாயம் ஏற்படுமென கருதுவது தவறான மதிப்பீடாகும்.

மாறாக சீனாவுடனோ அல்லது சீனா சார்ந்த அரசுகளின் வளர்ச்சி நிலையோ எதுவாயினும் அதுவே பிராந்திய நாடுகளுக்குப் பாதுகாப்பானது எனக்கருதமுடியும். சீனாவின் நிலையான போக்கு போணப்படும் வரை இந்தியா இப்பிராந்தியத்தில் எழுச்சியடைவது கடினமானதாகவே அமையப்போகின்றது.

ஆனால், கட்டார் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள துணைப் பிரதமர் அத்வானி, அங்கு உரையாற்றும்போது 21 ஆம் நூற்றாண்டு இந்தியர்களுக்கு உரியதென்றும், இந்தியா நிலையான சக்தியாக உலகத்தில் எழுச்சியடையுமெனக் கூறியுள்ளார்.

அவ்வாறே - புதுடில்லியில் ஒரு கருத்தரங்கில் ஜனாதிபதி அப்துல் கலாம் உரையாற்றும்போது, 2020 இல் இந்தியா சாதிக்கவுள்ளவற்றைப் பட்டியல்படுத்தியுள்ளதுடன், இந்தியா பலமான சக்தியாக எழுச்சியடையுமென்றும் கூறியுள்ளார். மேலும் அவர் இந்தியா 'பூமாரங்' ஆயுத வகையைச் சார்ந்த ஏவுகணையை விரைவில் பரிசோதிக்கவுள்ளதாகவும், உலகில் வேறு எந்த நாட்டிலுமே கண்டுபிடிக்கப்படாத தொழில்நுட்பம் இது எனவும் கூறியுள்ளார். இவை யாவும் அரசியல் பேச்சுக்களா? அல்லது யதார்த்தங்களா? என்பது பொதுமக்களுக்கே வெளிச்சம். ★

கே.ரீ.கணேசலிங்கம்

## யாழ். கூட்டுறவு கிராமிய வங்கி சமாசம்

# பிரமுக வங்கியில் வைப்பிலிட்ட

# 3.6 கோடி ரூபாவின் கதி என்ன?

பிரமுக வங்கியில், யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் 360 இலட்சம் ரூபாவை வைப்பிலிட்டதால் சமாசம் தற்பொழுது கையறு நிலையிலுள்ளது.

தொடர்ச்சியாக நட்டமடைந்து வந்த பிரமுக வங்கியை கடந்த ஆண்டு மத்திய வங்கி தடைசெய்ததும், அதனைத் தொடர்ந்து பிரமுக வங்கியின் இயக்குநர் சபையின் அங்கத்தவர்கள் தலைமறைவாகிவிட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகள் இணைந்து 1998ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் மாவட்ட கூட்டுறவு வங்கிகளின் சமாசத்தை உருவாக்கின. இச்சமாசத்தில் - கூட்டுறவு கிராமிய வங்கிகள் தங்களது பணத்தினை வைப்புச் செய்திருந்தன.

வங்கிகளின் சமாசம், பொதுச் சபையின் தீர்மானங்கள் எதுவுமின்றி வைப்புத் தொகையான 36 மில்லியன் ரூபாவை மேற்படி பிரமுக வங்கியில் வைப்புச் செய்திருந்தது என்றும், இதற்கு சமாசத்தின் இயக்குநர் சபையிலுள்ள தனிமனித செயற்பாடும், கையூட்டுப் பெறுவதுமே காரணம் என வங்கியில் பணத்தை வைப்பிலிட்ட வாடிக்கையாளர் ஒருவர் யாழ்.கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தின் பிரதியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

பிரமுக வங்கி செயலிழந்து இழுத்து மூடப்பட்டுவிட்டதால் வங்கியின் பிரதான அமைப்பாளர்கள் தலைமறைவாகிவிட்ட நிலையில் யாழ்.சமாசத்தில் வைப்பிட்ட சங்கங்கள் செய்வதறியாது ஏக்கத்தில் நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உரும்பிராயில் மணவாளக்கோல திருவிழா

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் இன்று முற்பகல் நடைபெறவுள்ளது.

1008 சங்குகளால் கருணாகரப் பெருமானுக்கு அபிஷேகமும், தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானமும் இடம்பெறும்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆசிரியர் 'விநாயகனே விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதன்' என்ற பொருளில் பிற்பகலில் சொற்பொழிவாற்றுவார்.

## ரி.ரி.என். அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் நாட்டிலிருந்து இயங்கும் தமிழ் ஒலிபரப்பு நிறுவனமான ரி.ரி.என். (TTN) தமது கிளை அலுவலகத்தை இல.23, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளது.

# இயக்குநர் சபைத் தீர்மானத்துக்கமையவே பிரமுக வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்டது

## யாழ். மாவட்ட கிராமிய கூட்டுறவு வங்கிகளின் சமாசத் தலைவர் பதில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் தன்னிச்சையாக பிரமுக வங்கிகளில் 360 லட்சம் ரூபாவை வைப்பிலிட்டதான குற்றச்சாட்டுத் தொடர்பாக, யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் 'நமது ஈழநாட்டு'க்கு அளித்துள்ள பதில் வருமாறு:

கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி, ஒவ்வொரு கூட்டுறவு அமைப்பும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலேயே தமது கணக்குகளைப் பேணவோ முதலீடு செய்யவோ முடியும்.

அதற்கமைய இச்சமாச மேன்மிகை நிதி, அவரால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய வங்கிகளில் ஒன்றான பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியில் இச்சமாசத்தின் இயக்குநர் சபைத் தீர்மானத்திற்கமைய ரூபா 34.3 மில்லியன் வரை முதலீடு செய்யப்பட்டது.

இவ்வங்கிகளில் முதலீடு செய்வதற்கு அது வழங்கிய அதிகரித்த வட்டி விகிதம் முக்கிய காரணமாக அமைந்தது.

இவ்வங்கியின் நடவடிக்கைகள் மத்திய வங்கியினால் முடக்கி வைக்கப்பட்டதான செய்தி தங்கள் பத்திரிகை உள்ளிட்ட வேறு பத்திரிகைகளில் வெளிவந்த 28.10. 2002 ஆம் திகதியன்றே, எமது ஐந்து நிலையான வைப்புக்களையும் 01.11.2002 ஆம் திகதியுடன் முடிவுக்குக் கொண்டுவந்து, அத்தொகைகளை எமக்கு மீளளிக்குமாறு இவ்வங்கியின் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் எம்மால் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. இவ்வறிவித்தலின் பிரதி மத்திய வங்கியின் மேற்பார்வைப் பிரிவுப் பணிப்பாளர் பத்மா சிறிசேன என்பவருக்கும் அனுப்பப்பட்டது.

இவ்வங்கியில் கூட்டுறவுத்துறை சுமார் 490 மில்லியன் ரூபா முதலீடு செய்திருப்பதால் இவ்விடயத்தில் கூட்டுறவு அமைச்சும், நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன் பொருட்டு அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றி எம்முடைய நிலையைத் தெரியப்படுத்தியதுடன் முதலீட்டு விபரங்கள் யாவும் கொழும்பு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

இத்துடன் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவரும் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுத்து வருவதால் அவருக்கும் எம்மால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், கடந்த மாதம் நடைபெற்ற அங்கத்துவ சங்கங்களின் பொதுச்கூட்டத்திலும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் எமது தொடர் அவதானத்தில் உள்ளது என்பதையும், சம்பந்தப்பட்ட சகலருடனும் நாம் தொடர்ந்து தொடர்புகொண்டு வருகின்றோம் என்பதையும் தெரிவிதது்க் கொள்வதாக, யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தமது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

# பருத்தித்துறை பஸ் நிலையப் பிரச்சினை நகராட்சி மன்றத் தலையீட்டால் தீர்வு!

பருத்தித்துறை பஸ்நிலையத்தில் ஏற்பட்ட பிரச்சினை, நகராட்சி மன்றத்தின் நடவடிக்கையினால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பஸ்நிலையப் பகுதியில் ஓட்டோ சாரதிகளுக்கும் போக்குவரத்துச்சபை பேருந்துகளின் சாரதிகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக, கடந்த 3 நாட்களாக பேருந்துகள் யாவும் டிப்போவிலிருந்து தமது சேவையை மேற்கொண்டுவந்தன. இதையடுத்து நகராட்சி மன்றம் எடுத்த புதிய நடவடிக்கையின்படி நேற்றுமுதல் மினி பஸ், பேருந்து, ஓட்டோ, இறங்குதுறையில் பணியில் ஈடுபடும் பாரவூர்திகள் என்பனவற்றுக்கென தனியான இடங்கள் ஒதுக்கப்பட்டு, வேலிகள் மூலம் வரையறை செய்யப்பட்டன.

அத்துடன் - முதலாம் குறுக்குத் தெருவிலும் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோருக்கு சந்தைப் பகுதியில் இடம் ஒதுக்கப்படவுள்ளதாகவும், 12 பாரவூர்திகள் மட்டுமே தமக்குரிய இடங்களில் நிறுத்தலாம் என்றும், இரவில் பாரவூர்திகள் எவையும் பஸ்நிலையப் பகுதியில் தரிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் நகராட்சி மன்றச் செயலாளர் தெரிவித்தார்.

இதையடுத்து பஸ்நிலையத்தால் ஏற்பட்ட பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, மீண்டும் பஸ் நிலையப் பகுதியிலிருந்து போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவையை ஆரம்பித்தன.

# தொண்டராசிரியரை நிரந்தரமாக்கும் உத்தேசம் எதுவும் இல்லையாம்!

## கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறுகிறார்

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கு எந்தவித உத்தேசமும் இல்லை என்று கல்வி அமைச்சர் கருணசேன கொடித்துவக்குத் தெரிவித்துள்ளார்.

சிங்களமொழி மூலம் ஆசிரியர்கள் 6000 பேர் மேலதிகமாக உள்ளநிலையில் புதிய ஆசிரியர்களை நிரந்தரமாக நியமிப்பதன் மூலம் தற்போதுள்ள ஆசிரியர்களுக்குச் சம்பளம் பெற்றுக்கொடுப்பதில் சிக்கலேற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடங்களில் உலகவங்கியுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாடு காரணமாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை மூடிவிடுதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு -கிழக்கு மாகாணங்களின் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகிறது. எதிர்காலத்தில் அந்த மாகாணங்களுக்காகத் தமிழ் மொழிமூல ஆசிரியர்கள் 3000 பேரை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# தீவுப் பகுதியில் பயிர்களை அழிக்கும் கட்டாக்காலிகள்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக மண்கும்பான், அல்லைப்பிட்டி, வேலணை போன்ற இடங்களில் கட்டாக்காலிக் கால்நடைகளின் தொல்லை உள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

விவசாயம் மேற்கொள்ளும் நிலப் பகுதிகளைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டிருந்தாலும், அதனை ஊடறுத்து மாடுகள் உட்சென்று பயிர்களை அழிக்கின்றன. இது சம்பந்தமாக எவரும் இதுவரையில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. விரைவில் இதுகுறித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிடின் விவசாயத்தைத் தாம் எதிர்காலத்தில் தொடர்ந்து மேற்கொள்ள முடியாமல் போய்விடும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

(53)

# தூத்துக்குடி கப்பல்சேவை மார்ச்சில் ஆரம்பமாகும்!

தூத்துக்குடிக்கும் இலங்கைக்குமான பயணிகள் கப்பற் போக்குவரத்துச் சேவை எதிர்வரும் மார்ச் மாதத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை ஆரம்பிப்பதால் இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என்றும் இதனால் அதிக வருமானத்தை ஈட்டலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி இந்திய கப்பற் போக்குவரத்து அமைச்சுடன் ஆராயப்பட்டு வருவதாகவும் இந்தப் பயணம் எட்டு மணித்தியாலம் கொண்டதும் போக்குவரத்துக் கட்டணம் 8,000 ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட 22 கழகங்களுக்கிடையே, மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

இக் கிரிக்கெட் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் என்று கோப்பாய் விளையாட்டு அலுவலர் எஸ். சுதாகரன் தெரிவித்தார்.

# மாணவர் சீருடைத் துணிகள் பெப்ரவரி இரண்டாம் வாரத்தில்!

## கல்வியமைச்சு மேலதிக செயலாளர் தகவல்

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படும என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தில்லை நடராசா தெரிவித்தார்.

முதலில் இத்துணிகள் 400 மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர், அங்கிருந்து 10 ஆயிரம் இணை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரம் முதல் சீருடைத் துணிகளை மாணவர்களின் பெற்றோர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மேலும் தெரிவித்தார். 56 லட்சம் சீருடைப் பொதிகள் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடம் முதலாம் ஆண்டில் சேரும் புது மாணவர்களுக்கு சீருடைத் துணி பெறுவதற்கான விண்ணபபங்களை பெற்றோர் சம்பந்தப்பட்ட அதிபர் மூலம் அனுப்பி வைத்தால் அவற்றை விநியோகிப்பதற்கு. நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# அடுத்த மாதம் அரசுக்கு எதிராக பேரணிகளை நடத்த முடிவு!

## எதிர்க்கட்சித் தலைவர் அறிவிப்பு

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முழுவதும் - வாழ்க்கைச் செலவு அதிகரிபபு, நாடாளுமன்றில் தொழிலாளர் சட்டம் நிறைவேற்றப்பட்டமை ஆகியவற்றுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தவுள்ளன.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், இந்தத் தர்மானம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பெப்ரவரி 18 ஆம் திகதி 12.31 மணிக்கு மக்கள் தங்கள் தங்கள் வேலைகளை நிறுத்தி, மௌனத்தை அனுஷ்டிக்குமாறு கேட்கப்படவுள்ளதாகவும்,

இந்த எதிர்ப்புப் பேரணியில் -லங்கா சமசமாசக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஜே.வி.பி. மற்றும் தொழிற் சங்கங்களும் இணையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## துணைவேந்தர் பதவிக்கான தேர்தல் இன்று

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கான தேர்தல் இன்று மாலை 2 மணிக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வானொலி ஒலிபரப்பு நடத்த அனுமதி கேட்கிறார் பிக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் வானொலி உபகரணங்களை இறக்குமதி செய்து, வானொலி ஒலிபரப்பை மேற்கொள்ள அனுமதி வழங்கியது போல, தமக்கும் வானொலி ஒலிபரப்பு அனுமதி வழங்கப்பட வேண்டும் என ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் வண.குணவன்ச தேரர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு வண. குணவன்ச தேரர் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறார்.

தம்மிடம் வானொலி நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான முதலீட்டு வசதியிருப்பதாகவும், தொழில்நுட்ப வசதிகள் இருப்பதாகவும்-எனவே தமக்கும் வானொலி ஒலிபரப்பு நடத்த அனுமதி வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன், அரசாங்கம் வானொலி ஒலிபரப்பு நடாத்துவதற்கான அனுமதியை வழங்கத் தவறுமாக இருந்தால், நாடு தழுவிய ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே, சிஹல உறுமயவும் தமக்கு வானொலி ஒலிபரப்பு அனுமதி வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.(01)

## தகவல் தொழில்நுட்ப மையம் நேற்றுத் திறந்து வைப்பு

**பொதுமக்களும் தகவல்களைப் பெறலாம்**



யாழ்.வணிகர் கழகத்தில் தகவல் தொழில்நுட்ப மையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப மையம் ஜி.ரி.இசற் குழுமத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த மையத்தைச் செயற்படுத்துவது மற்றும் வர்த்தக விருத்தி தொடர்பான உடன்படிக்கையும் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன், ஜி.ரி.இசற் குழுமத் தலைவர் யூபோ கார்டினர், கொழும்பு வர்த்தக சம்மேளனத் தலைவர் திலக் டீ சொய்சா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இவ்வொப்பந்தத்தின் மூலம் தென்பகுதி மற்றும் வெளிநாடுகளுடனான வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்ள வழி ஏற்பட்டுள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப மையத்தில் வர்த்தகம், கைத்தொழில் தொடர்பாக எவரும் தகவல்களைத் திரட்டிக் கொள்ள முடியும் எனவும், இது மாணவர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு உதவியாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (116)

## இலங்கை ஆசிரியர் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடமாகாணக் கிளைகளின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய செயற்குழு தெரிவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதன்படி, தென்மராட்சிக் கிளைக்கான கூட்டம் நாளை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வலிகாமம் கிளைக்கான கூட்டம் அடுத்த மாதம் 2 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும், வடமராட்சிக் கிளைக்கான கூட்டம் அடுத்த மாதம் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும்,

அடுத்த மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு யாழ்ப்பாணக் கிளைக்கான கூட்டமும் [illegible] மணிக்கு தீவகக் கிளைக்கான [illegible]டமும் யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(லி)

## எம்.பிக்கள் குழு திரும்புகிறது

நான்கு நாடுகளின் சமஷ்டி முறைமைகள் குறித்து ஆராயச் சென்றிருந்த 15 பேர் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு இன்று காலை நாடு திரும்பவுள்ளது.

ஒஸ்ரியா பெல்ஜியம், ஜேர்மனி இத்தாலி ஆகிய நாடுகளுக்கு சென்று சமஷ்டி குறித்து இந்தக் குழு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. ஜே.வி.பி தவிர்ந்த ஏனைய கட்சிகளைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இரு ஊடகவியலாளர்களும் இக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

## பீரிஸ் - சுவிஸ் அமைச்சர் பேச்சு

(பேர்ன்)

நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுவிற்சலாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் மற்றும் இலங்கைக்கான நிதியுதவிகள் குறித்து பேசப்பட்டதாகத் தெரியவருகின்றது. இச்சந்திப்பு நேற்று நடைபெற்றது.

## சகாவைக் கொலை செய்த நான்கு கொரியர்கள் கைது

**கண்டியில் நேற்று மாலை சம்பவம்**

தம்முடன் கூடவந்த ஒருவரைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு அவரது சடலத்தை உரப்பையில் கட்டிச் சென்று காட்டில் வீசிய நான்கு கொரிய உல்லாசப் பிரயாணிகளைப் பேராதனைப் பொலிஸார் நேற்று மாலை 6 மணியளவில் கைது செய்தனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தம்முடன் கூட வந்த கொரியர் ஒருவரை நான்கு கொரியர்களும் நேற்றுக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளனர். இதையடுத்து உடலை உரப்பை ஒன்றினுள் கட்டி ஓட்டோவில் கொண்டு சென்றபோது வீதியில் இரத்தம் சிந்துவதை அவதானித்த பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து குறித்த வீதி வழியாக பொலிஸார் விரைந்து சென்றபோது, அருகிலுள்ள காட்டில் உரப்பையில் இருந்த சடலத்தை வீசிவிட்டு ஓட்டோ திரும்பிக் கொண்டிருந்தது.

பொலிஸார் ஓட்டோவை வழிமறித்து அதிலிருந்த நான்கு கொரியர்களையும் கைது செய்தனர். சடலமும் மீட்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (01)

## யுனிசெப் நிறைவேற்றுப் பணிப்பாளர் வட-கிழக்கு நிலைமையை ஆராய்வார்

யுனிசெப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரல் செலம் எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கை வருகிறார்.

இங்கு 3 நாட்கள் தங்கி இருக்கும் அவர், வடக்கு- கிழக்கு நெருக்கடிகள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் பற்றி ஆராயவுள்ளார்.

யுனிசெப் பணிப்பாளர்- ஜனாதிபதி, பிரதம மந்திரி, அமைச்சர்கள் ஆகியோரையும் சந்திக்கவுள்ளனர்.

அவர் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களுக்கான நேரடி விஜயத்தையும் மேற்கொள்வார்.

யுனிசெப்பின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களைப் [illegible]வையிடுவதோடு, சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிரான ஊடகத் திட்டம் ஒன்றையும் அவர் மேற்கொள்ள இருப்பதாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பல்கலைக்கழக...

யளிக்கப்பட்டது.

எனினும் - அதிகாலை ஆறு மணியளவில் இம்மாணவன் சிரேஷ்ட மாணவர்களால் அங்கிருந்து எவருக்கும் தெரியாமல் மீண்டும் பாலசிங்கம் விடுதிக்குக் கொண்டு வரப்பட்டார்.

இந்த விவகாரம் வெளித்தெரிய வந்ததும் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உடனடி விசாரணைக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து விடுதிக்குப் பொறுப்பான பேராசிரியர் அ.சண்முகதாஸ் மேற்கொண்ட விசாரணைகளின் பேரில் - இச் சம்பவத்தில் ஈடுபட்ட மாணவன் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார்.

அம்மாணவனை இடைநிறுத்தும் வேண்டுகோள் அடங்கிய விசாரணை அறிக்கை பேராசிரியர் சண்முகதாஸினால், பல்கலைக்கழக உபவேந்தரிடம் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து இன்று காலை துணைவேந்தர், சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் மற்றும் பல்கலைக்கழக சிரேஷ்ட ஒழுக்காற்று உத்தியோகத்தர் முன்னிலையில் தோன்றும்படி குறிப்பிட்ட மாணவனுக்கு பணிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இவ் விசாரணையைத் தொடர்ந்து- குறிப்பிட்ட சிரேஷ்ட மாணவன் பல்கலைக்கழகத்திலிருந்து இடைநிறுத்தப்படுவார் எனத் தெரியவருகின்றது.

### காணாமற்...

விசாரணை அறிக்கைகளை மறுநாள் காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகளுக்கு காண்பிக்க வேண்டும் எனவும், விசாரணைக்கு அழைப்பவர்களின் பெயர் விபரம் முதல்நாள் வெளியிட வேண்டும் எனவும் கோரிக்கைகளை முன்வைத்துள்ள காணாமற்போனோரின் சங்கம், தமது இக் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான், விசாரணைக் குழுவின் விசாரணைக்கு தமது உறுப்பினர்கள் வருவர் என அறிவித்திருந்தது.

மேற்படி கோரிக்கைகளை விசாரணைக் குழுவின் தலைவரான தேவநேசன் நேசையா ஏற்றுக் கொண்டுள்ளார். இதன் பின்னரே நேற்று விசாரணைக்கு காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகள் சென்றனர்.(லி)

### களுத்துறை...

இந்த உண்ணாவிரதத்தின் போது, அரசியல் கட்சித் தலைவர்கள் தேவையற்ற விதத்தில் தலையீடு செய்து, பொய் வாக்குறுதிகளை வழங்க வேண்டாம் என்றும் இம்முறை தாம் அத்தகைய வாக்குறுதிகளை நம்பப் போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### உருக்குலைந்த....

நிலையில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் காணப்பட்ட பகுதிக்கு அண்மையில் சிவப்பு நிறச் சட்டை, பாவாடை என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட சடலம் உரப்பை ஒன்றில் பொதியிடப்பட்டு அடையாளம் காணும்பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அப்பகுதிக்குச் சென்று விசாரணை மேற்கொண்ட ஊர்காவற்துறை நீதிவான் பா.சுப்பிரமணியம், மேற்படி சடலம் தொடர்பாக மேலதிக விசாரணையை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச,51)

## அதாவுல்லா மீதான தடை 31ஆம் திகதி வரை நீடிப்பு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பதவி மற்றும் அதியுயர் பதவிகளைப் பயன்படுத்துவது சம்பந்தமாக அதாவுல்லா அணியினருக்கு எதிராக விதிக்கப்பட்ட தடை உத்தரவு, எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த மனுவை நீதிமன்றம் பரிசீலித்த பின்னர், கொழும்பு மாவட்ட நீதிபதி இந்தத் தடை உத்தரவை மேலும் நீடித்தார்.

## தூதரகப் பாதுகாப்புக்கு விசேட பொலிஸ் குழு

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக விஷேட பொலிஸ் குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நியன்ஸி பெரேரா தெரிவித்துள்ளார்.

இராஜதந்திரிகள் பாதுகாப்புப் பிரிவு என்ற பெயரில் அந்தப் பொலிஸ் படைப்பிரிவு இயங்கவுள்ளது. இப் பொலிஸ் குழு இலங்கையில் உள்ள 30 தூதரகங்கள் மற்றும் 35 துணைத் தூதரகங்களில் 24 மணிநேரமும் பாதுகாப்பை வழங்கவுள்ளது.

ஈராக் மீதான தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா தயாராகி வருகின்ற நிலையில் வெளிநாட்டுத் தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்பதாலேயே இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.49 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 156.75 | 158.06 |
| 1 யூரோ | 103.52 | 104.68 |
| 1 சுவிஸ் பிராங் | 70.52 | 71.62 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.85 | 57.83 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

aat

2003 June aat பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான stage I & II இற்குரிய விரிவுரைகள் நடைபெறுகின்றன.

அடிப்படைத் தகுதி:- G.C.E (O/L) 5 பாடங்களில் சித்தி

குறிப்பு:- புதிய மாணவர்களுக்கான பிந்திய பதிவுகள் 08.02.2003 வரை ஏற்றுக்கொள்ளப்படும். 3A மாணவர்களுக்கு 50 % சலுகைக் கட்டணம்

(சி-524)

தொடர்புகள்:- CAREER. COM .INSTITUTE No.79 Main street,Jaffna

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.